3/3

உ

குன்றக்குடி
அருள்தரு வீரமாகாளியம்மன்
பாமாலை

வெளியிடுகிறவர்
குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனகர்த்தர்
திருவருள்திரு
தெய்வசிகாமணி பொன்னம்பல தேசிக
அடிகளார்

உரையாசிரியர்
குன்றக்குடி ஆதீனப்புலவர்
வித்வான் க. கதிரேசன் எம்.ஏ;பி.எட்.

வெளியீடு
அருள்நெறிச் செல்வர்
குன்றக்குடி நா. ஆதிமூலம்
திருப்பூர்-4

உ

குன்றக்குடி

அருள்தரு வீரமாகாளியம்மன்

பாமாலை

வெளியிடுகிறவர்

குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனகர்த்தர்

திருவருள்திரு

தெய்வசிகாமணி பொன்னம்பல தேசிக

அடிகளார்

உரையாசிரியர்

குன்றக்குடி ஆதீனப்புலவர்

வித்வான் க. கதிரேசன் எம்.ஏ;பி.எட்.

வெளியீட்டு நாள்

31–5–1996


விசாக விழா

வெளியீடு

அருள்நெறிச் செல்வர்

குன்றக்குடி நா. ஆதிமூலம்

திருப்பூர்-4



அருள்தரு

வீரமாகாளி அம்மன்

குன்றக்குடி



குன்றக்குடி வைத்தியம்

M. கணபதியா பிள்ளை

3-3

குன்றக்குடி

அருள்தரு வீரமாகாளியம்மன் பாமாலை

உள்ளே..... பக்க எண்.

தோரண வாயில்

திருவருள், அலகிலா விளையாட்டுடையது. அதன் விளையாட்டு இன்ன அளவினது என்று அறியும் வரையறைக்குட்பட்டதன்று. அது குன்றக்குடி வைத்தியம் வரகவி மு.கணபதியாபிள்ளையிடம் குடி கொண்டிருந்தது.

நெல்லை மாவட்டத்து இல்லத்துப்பிள்ளைமார் (ஈழத்துப் பிள்ளைமார் இவர்கள் என்பது அறிஞர் துணிபு) குடியில் தோன்றி, மதுரையில் சிலகாலம் வாழ்ந்து, இராசபாளையம் அருகில் உள்ள பனையூர்த் (தென்பனையூர்) தட்சிணாமூர்த்தி சுவாமிகளிடம் அள வற்ற ஈடுபாடுகொண்டு, பிறகு குன்றக்குடிக்கு வந்து நிலையாகத் தங்கியவர் மு. கணபதியா பிள்ளை.

இவர் தந்தையார் ஜி. முத்துச்சாமி பிள்ளை இவர் மதுரையில் பென்ஞ் மாஜிஸ்டிரேட்டாக இருந்தவர்; பனையூர் தட்சிணாமூர்த்தி சுவாமிகளிடம் உபதேசம் பெற்றவர்; சித்தமருத்துவத்தில் கைதேர்ந் தவராதலின் ''மதுரவைத்திய பண்டிதர்'' என்று வாய்மணக்க அழைக்கப்பெற்றவர்.

''குலவிச்சை கல்லாமல் பாகம்பட்டது''. கணபதியாபிள்ளையும் கைதேர்ந்த மருத்துவரானார். சத்திவழிபாட்டில் ஊன்றி நின்ற அவர் அருட்கவியானார்; அன்னையின் அருளால். ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, வித்தாரகவி என்ற நால்வகைக்கவியும் கைவந்த கலை யாயின.

இவருக்கு நெருங்கிய நண்பர் கல்லல் மணிவாசக சரணாலய சுவாமிகள். இவர் ''ஸ்ரீ முருகப் பெருமான் சோடசப் பதிகம்'' தந்த வர். நம் கணபதியாபிள்ளைக்கு உற்றுழி உதவியும், உறுபொருள் கொடுத்தும், உசாத்துணையாகியும், மகிழ்ந்து, மகிழ்வித்த பெருந் தகை குன்றக்குடி மேலமடம் அதிபர் ''கல்விக்கடல்'' கணபதி சுவாமி கள். இருகணபதிகளும் இணைபிரியாக் கணபதிகள்.

கணபதியாபிள்ளை எழுதிய நூல்கள் பல என்பர். இவரது ''சத்தப்பிரபந்தம்'' என்னும் நூலின் முகப்புப் பக்கத்தில், தெய்வத் துதித்திரட்டு, கதிர்காமம் காவடிச்சிந்து, பனையூர் பன்மணிமாலை, குன்றாக்குடி வீரமாகாளியம்மன் மாலை, வீரம்மைக்கண்ணி என்ப வற்றை மட்டும் பெயரளவில் அறியமுடிகிறது. இவற்றையும், பிற நூல்களையும் சுவைக்கும் வாய்ப்பைத் திருவருள் அருளுமாக.

இவரது சத்தப்பிரபந்தம் கி.பி. 1930இல் வெளியிடப்பெற்றது. எழுவகைப் பிரபந்தங்கள் கொண்ட இந்நூலுள் ஐந்தாவதாக ''குன்றக்குடி ஸ்ரீ வீரமாகாளியம்மை பல பாமாலை'' என்ற பிரபந்தம் அமைந்துள்ளது. இத்துடன் இதில் அடியேனது அருள்தரு வீரமாகாளியம்மை வருகைப்பதிகம் இணைப்பாகச் சேர்க்கப்பெற்றுள்ளது.

''ஸ்ரீ வீரமாகாளியம்மை பல மாலை''; சொல் நலம், பொருள் நலம், சிலேடை நலம், மடக்கு நலம், சாத்திர தோத்திர நலங்கள் முதலிய பன்னலங்களும் ஒளிவிடும் மணிமாலையாக அமைந்துள்ளது

அனைத்துப்பாக்களுக்கும் சந்திபிரித்து, கூட்டுமுறை, குறிப்புரை, பொழிப்புரை, இன்றியாமையா இலக்கணக்குறிப்பு என்ற வகையில்தந்து தெளிவுபடுத்த முயன்றுள்ளேன்.

என்னை இத்தகுபணியில் ஈடுபடுத்தி, ஊக்குவித்து, வாழ்த்தும் அருளி இன்று தோன்றாத் துணையாய் இருந்து அருள்பாலிக்கும் போற்றுதலுக்கும், வணக்கத்திற்கும், வழிபாட்டிற்கும் உரிய 45வது குருமகா சந்நிதானம் அருள்நெறித் தந்தை தவத்திரு அடிகளார் பெருமானின் பொன்னார் திருவடிகட்கு என் மனம், மொழி, மெய்யாலான பணிவன்பு கலந்த வணக்கங்களைச் செலுத்துகின்றேன்.

வழக்கம்போல் இந்நூலுக்கும் அணிந்துரை வழங்கி வாழ்த்தியருளியுள்ள போற்றுதலுக்கும், வணக்கத்திற்கும், வழிபாட்டிற்கும் உரிய 46வது குருமகா சந்நிதானம் திருவருள்திரு தெய்வசிகாமணி பொன்னம்பல தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் பொன்னார் திருவடிகட்கு என் மனம் மொழி மெய்யாலான பணிவன்பு கலந்த வணக்கங்களைச் செலுத்துகிறேன்.

இந்நூல் முழுமையும் ஆழமாகப் படித்து அணிந்துரை தந்துள்ள அறிஞரும், அருமை நண்பரும் காரைக்குடி இராமசாமி தமிழ்க்கல்லூரி முதல்வரும் ஆகிய திருமிகு. தமிழாகரர் தெ முருகசாமி ஐயா எம்.ஏ;பி.ஓ.எல் அவர்கட்கு என் அன்பு கலந்த நன்றி, வணக்கம்.

இந்நூலை வெளியிடத் தானேவிரும்பி முன்வந்து உதவியுள்ள அருமை நண்பர், குன்றக்குடியார், திருப்பூரில் அரசுப்பணிபுரிகிறவர், அடக்கமே உருவானவர், அருள்தரு வீரமாகாளியம்மையின் திருவருளுக்குப்பாத்திரமானவர், அம்மையின் சித்திரைக் கரகத் திருவிழாவின் முதல் திருநாளை முதன்மை சான்ற திருவிழாவாக நடத்திவருகின்றவர் ஆகிய திருமிகு நா. ஆதிமூலம் அவர்களுக்கு எல்லா நலன்களும் மேன்மேலும் பெருக அன்னையையும் அருள்தரு சண்முகநாதப் பெருமானையும் இறைஞ்சி வாழ்த்துகிறேன்.

இந்நூலை நன்முறையில் அச்சிட்டுதவியுள்ள குன்றக்குடி ஸ்ரீ சண்முகநாதன் அச்சகத்தினருக்கு என் நன்றி.

திருவருளுக்கும் குருவருளுக்கும் என் வணக்கங்கள்.

''யானே புலனும் நலனும் இலனன்றே
ஆனாலும் என் போல் மற்று யார் பெற்றார்''

அடியவன்,

குன்றக்குடி, வித்வான் க. கதிரேசன் எம்.ஏ;பி.எட்
10-4-96. குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனப் புலவர்

குறிப்பு : 1930இல் வெளிவந்த வரகவி மு. கணபதியாபிள்ளை அவர்களது சத்தப் பிரபந்தம் நூலில் உள்ளவாறே சித்திரகவிகள் (சித்திரத்தில் அமைக்காமல்) இதில் உள்ளன. இவற்றைச், சித்திரத்தில் அமைத்துப் பலரும் கண்டு, சுவைத்து மகிழும், நல்வாய்ப்பைத் திருவருள் அருளவேண்டுகிறேன்.



உ

சிவ சிவ

திருவருள் திரு
**தெய்வசிகாமணி
பொன்னம்பல தேசிக
பரமாசாரிய சுவாமிகள்**
(ஆதீனகர்த்தர்)

திருவண்ணாமலை ஆதீனம்
குன்றக்குடி 630 206
பசும்பொன் முத்துராமலிங்கத்
தேவர் மாவட்டம்
(தமிழ்நாடு)

வாழ்த்துரை

"அம்மையே! அப்பா! ஒப்பிலாமணியே!" என்று மணிவாசகப் பெருமான் கரைந்து உருகுவார். மேலும் "பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து" எனப்பரம்பொருளைப் பாடுவார். அருள்தரு சண்முகநாதப்பெருமான் அருள்பாலிக்கும் மயூரமலைக்கு வடபுறத்தில் அழகிய பாறையின் மீது அன்னை வீரமாகாளி அருள் பாலித்துக் கொண்டிருக்கிறாள். ஊரின் காவல் தெய்வமாய் அருள்மழை பொழிந்து கொண்டிருக்கிறாள்.

அன்னையின் அருட்கடாட்சத்தால் குன்றக்குடி வைத்தியர் மு. கணபதியா பிள்ளை அன்னையின்மேல்பாமலர்களைச் சொரிந்துள்ளார். மிகச் சிறந்த புலமைத்திறன் இப்பாடல்களில் காணப்படுகிறது. கொண்டு கூட்டிப் பொருள் உணரும் பாங்கில் பாடல்கள் பாடப்பட்டுள்ளன. மண்ணுக்குள் புதையல் மறைந்திருப்பதைப் போல, குன்றக்குடி மண்ணுக்குள் குவலயம் அறியாமல் ஆன்மீக அருள்பெற்ற தலைசிறந்த தமிழ்க்கவிஞராக வாழ்ந்திருக்கிறார் மு. கணபதியா பிள்ளை என்பதை இப்பாடல்கள் பறைசாற்றுகின்றன.

முள் இருக்கும் தோலைக் கீறிப் பிளந்துவிட்டால் தித்திக்கும் பலாச்சுளைகள் கிட்டும். எங்கோ முடித்துவைத்த முடிச்சுக்களாய் உள்ள அருட்பாக்களின் புதிரினைத்தம் புலமைத் திறனால் வெளிச்சம் போட்டு விளங்க வைத்திருப்பவர் நம் ஆதீனப்புலவர் க. கதிரேசன் அவர்கள்.

காரிருளில் கானகத்தைக் கடப்பதற்குக் கைவிளக்குத் தேவை; வழித்தடம் மாறாப் பயணத்திற்கு வழிகாட்டி தேவை. தமிழ்க் கடலில் மூழ்கி முத்தெடுக்கத் தமிழ்ப்புலமை சான்ற அறிஞர் துணை தேவை. அத்தகைய அறிஞர் பெருந்தகைதான் ஆதீனப் புலவர் க. கதிரேசன் அவர்கள். இவர் இனிய பண்பாளர்; ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர். புலமை இவருக்குப் பொழுதுபோக்கு அல்ல; குருதியுடன் கலந்த இயல்பு.

பக்திநலம் சார்ந்த இப்பாமாலையை - அகிலம் காக்கும் அன்னை வீரமாகாளி மீது தொடுக்கப்பட்ட இப்பாமாலையை - உலகு உணர வெளிக்கொணரும் முயற்சிக்கு உதவிய பக்தியுணர்வை இயல்பாய்ப் பெற்ற திருப்பூரில் பணிபுரிந்து வரும் நம் குன்றக்குடி நா. ஆதிமூலம் அவர்களுக்கு இனிய பாராட்டுக்கள்; வாழ்த்துக்கள்; நன்றி.

பக்திச் சுவை சொட்டச் சொட்ட அன்னையின் மீது உள்ளம் உருகிப்பாடப்பெற்ற இந்த பாடல்களை அனைவரும் பாடிப் பயன் பெறட்டும். அகிலம்காக்கும் அன்னையின் அருட்சக்தி அவனி எங்கும் பொழியட்டும். அன்னையின் அருள் அனைவருக்கும் கிடைக்க அன்னையின் அருளை நினைந்து வாழ்த்துகிறோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

தமிழாகரர் தெ. முருகசாமி முதல்வர்
இராமசாமி தமிழ்க்கல்லூரி, காரைக்குடி - 3

அணிந்துரை

எட்டுத்திக்கும்புகழும் குன்றக்குடியின் வடபால் ஒரு சிறுபாறை மீது கோயில் கொண்டிருக்கும் அருள்மிகு வீரமாகாளி அம்மையின் அருளுக்குப் பாத்திரமான ''வரகவி''மு. கணபதியா பிள்ளை என்பவர் அம்மைமீது பாடிய பிரபந்தப் பாடல்களைப் படித்தறியும் பேறு கிட்டியது.

'ஆரறிவார் நல்லாள் பிறக்கும் குடி' என்றபடி வெளியுலகிற்குத்தெரியாத எத்தனையோ கவிஞர்கள் நாட்டில் உள்ளனர் என்ற உண்மையை இப்பிரபந்த ஆசிரியரைக்கொண்டே நன்குணரலாம்.

வரகவி மு. கணபதியா பிள்ளை ஓர் சக்தி உபாசகர். அருள் கிட்டிய அளவில் ஆவேசம் வந்தவரைப்போல் அருட்கவிகளை வகை வகையாக அள்ளி வீசியுள்ளார்.

''மறைபட் டுள்ளது அரும்பொருட் செய்யுள்'' என்ற முக்கூடற்பள்ளு(-21-) செய்யுட் கருத்துப்படி இப்பிரபந்தப் பாடல்களில் முன்னுள்ள முப்பத்தாறு பாடல்கள் சொல் விளையாட்டால் அமைந்தவை.

திறவு கோல்கொண்டு பூட்டைத்திறக்குமாறு போலச் சொல்லங்கார விளையாட்டால் பூட்டப்பட்டுள்ள பாடற்பொருட்குக், குன்றக்குடி ஆதீனப்புலவர் திருமிகு க. கதிரேசன்எம்.ஏ;பி.எட். அவர்களால் தரப்பெற்றுள்ள உரைவிளக்கம் திறவு கோலாய் உள்ளது.

எடுத்துக்காட்டாகத் தொடக்கப் பாடலைக் கொள்ளலாம்.

புக எகிய பூமா ரிரிரிரிரி ரிரி
உகுகுழையிட் டந்நாள் உரித்தாய் - தகுகைவைத்தாய்
பூட்டினாய் விற்றாய் புசித்தாய் இடங்கொண்டாய்
பாட்டினாற் பாஅருள்அப் பா.

இவ்வெண்பாவின் பொருள் புரியாத புதிராக உள்ளது. இது சிவபெருமானின் திருவிளையாட்டை உள்ளடக்கமாகக்கொண்டதென்பது உரை விளக்கத்தால் அறியலாமேயன்றி மேலோட்டமாகப் பார்த்தால் விளங்கிக் கொள்ளச் சாத்தியமில்லை.

பாடலின் இறுதியிலுள்ள 'அப்பா' என்ற சொல்லையும் இரண்டாம் அடியிலுள்ள 'அந்நாள்' என்ற சொல்லையும் முறையே நிரல்படுத்திக் கொண்டு 'புக எகிய பூமா' என்ற தொடக்கத்தின் ஒவ்

வொரு எழுத்தோடும் முதல்வரியிலுள்ள ஏழு ''ரி'' என்ற எழுத்தையும் தனித்தனியே சேர்த்தால், புரி, கரி, எரி, கிரி, வரி, பூரி, மாரி என்ற ஏழுசொற்கள் உருவாகும். இந்த ஏழோடும் இரண்டாம் வரி முதலாக உள்ள உகு, உரித்தாய், வைத்தாய் போன்ற சொற்களைக் கூட்டினால் முறையே புரி உகுத்தாய், கரி குழையிட்டு உரித்தாய் என்பன போன்ற தொடர்கள் உருவாகும். இவைகள் சிவபெருமானின் செயல்களாகும். இவைகளை எழுத்தெண்ணிக் கூட்டினாலன்றி அறிய இயலாதென்பதால் திக்குத் தெரியாத காட்டில் வழித்தடம் உள்ளதுபோல் அமைத்தது ஆதீனப்புலவரின் உரை விளக்கமாகும்.

பாடல்களின் கடுமையை எளிமைப்படுத்துவான் வேண்டிக் கொடுக்கப்பெற்றுள்ள உரை விளக்கத்துள் ''கூட்டுமுறை'' என்ற புதிய உரைப்பாங்கு சிறப்பாக உள்ளது. வழக்கமாக அமையும் குறிப்புரையும் பொழிப்புரையும் தேவையான அளவில் அமைந்து பாடற் பொருளை விளங்க வைக்கின்றன.

எளிமையான வகையில் கவிதைகளை எழுதி எல்லோர்க்கும் புரியுமாறு செய்யும் பரபரப்பான காலத்தில் இப்பிரபந்தப் பாடல்களைப்போல எழுதுவதும், அவற்றின் பொருள் காண்பதும் காலவிரயம் என எண்ணுவார் உண்டு. ஆனால் அற்பப் பொருளியல் உலகில் அலைந்து திரியும் மனமும் எண்ணமும் ஒரு முகப்பட இவை போன்றவை மாமருந்தாக உள்ளன என ஐயமின்றிக் கூறலாம்.

நிரோட்டகம், திரிவஞ்சிக்கவி, சுழிகுளப்பந்தம், மாலைமாற்று போன்ற வகையில் அமைந்த பல கடுமையான பாடற் கடலில் மூழ்கி மூச்சடக்கி முத்தெடுத்தாலும், வழிபடு தெய்வம் கண்ணாற் கண்டது போல எளிதில்பொருள் விளங்குமாறு கும்மிப்பாடல்களும், கீர்த்தனைகளும், வருகைப்பதிகங்களும் இப்பிரபந்தத்தின் இறுதியில் அமைந்து வெயிலின் கடுமையைப் போக்கும் நிழல்தரு மரங்களாக உள்ளன என்பது மனதிற்கு ஆறுதலைத் தருகின்றது.

மனித ஆன்மா உடலால் வாழ்வதன்று; உள் ஒளி உயிர்ப்பால் வாழ்வது. அவ்வுள் ஒளியை எளிய முறையில் பெற அன்னை பராசக்தியின் வடிவாகிய குன்றக்குடி வீரமாகாளியை அனுதினமும் கும்பிட்டு வந்தால் அவளே ''குலதெய்வமாய் நமக்கு வருவாள்'' என்ற கும்மிப்பாடலின் (13) கருத்தே அம்மையின் அருளாகவும் ஆன்மாவின் பலமாகவும் இந்நூல் கற்பார், கேட்பார், வெளியிட்டார், உரை தந்தார் ஆகிய அனைவரும் அடைவர் என்பது திண்ணம்.

முன்னைக்கும் பின்னைக்கும் மூள்வினையாம் அத்தனைக்கும்
அன்னை அடிசரணே காப்பென்ற - பொன்னைநிகர்
வீரமா காளிப் பிரபந்த நூலுரை தான்
சாரம் போல் ஆகுந் தமிழ்க்கு!

காரைக்குடி
8 4-96

அன்புடன்
தெ. முருகசாமி

குரு அருள்

அருள்தரு வீரமாகாளியம்மன் பாமாலைகள்

காப்பு

பரசிவ வணக்கம்

1. புகஎகிய பூமா ரிரிரிரிரி ரிரி
உகுகுழை யிட்டு அந்நாள் உரித்தாய் - தகுகைவைத்தாய்
பூட்டினாய் விற்றாய் புசித்தாய் இடங்கொண்டாய்
பாட்டினாற் பாஅருள்அப் பா.

கூட்டுமுறை

அப்பா, அந்நாள் என்று தொடங்கிப் ''புக எகிய பூமா'' என்ற ஏழு எழுத்துகளுடன் ரிரிரிரிரிரிரி என்ற ஏழு எழுத்துகளையும் தனித்தனியே கூட்டி; உகு, குழையிட்டு உரித்தாய், தகுகை வைத்தாய், பூட்டினாய், விற்றாய், புசித்தாய், இடங்கொண்டாய் என்ற ஏழினையும் முன்னையவற்றோடு முறையே கூட்டிப்பாட்டின் நாற்பா அருள் என்று முடிக்க.

அந்நாள் :

புரி உகுத்தாய்; கரி குழையிட்டு உரித்தாய்; எரி தகு கை வைத்தாய்: கிரி பூட்டினாய்; அரி விற்றாய்; பூரி புசித்தாய்; மாரி இடங்கொண்டாய் என்று அமைக்க.

முதலடி ஈற்றசை ''ரிரி'' மட்டுமே. ''விட்டிசைத்தல்லால் முதற்கண் தனிக்குறில் நேரசை என்று ஒட்டப்படாது'' என்றபடி இங்கு விட்டிசைத்தலால் நேர் நேர் ஆனது என்க.

குறிப்புரை

புரி—அசுரர்களின் மூன்று கோட்டைகள். உகுத்தாய்—நீறாக்கினாய்; கரி—யானை; குழையிட்டு—வருந்தச்செய்து; உரித்தாய்—அதன் தோலை உரித்தாய்; எரி—தீ; கை வைத்தாய்—இடத்திருக்கையில் தாங்கினாய்; கிரி—மேருமலை; பூட்டினாய்—வில்லாக வளைத்துப் பூட்டினாய்; அரி—வளையல்; விற்றாய்—மதுரையில் விற்றாய்; பூரி—கூலி (வந்திக்கிழவி தந்த பிட்டாகிய கூலி); மாரி—வீரமாகாளியம்மையை; இடம் கொண்டாய்—இடப்பாகத்தில் கொண்டாய்.

பொழிப்புரை

அப்பனே! நீ அந்நாளில் அசுரர்களின் முக்கோட்டைகளையும் புன்முறுவலால் நீறாக்கினாய்; தக்கன் ஏவிய யானையை வருந்தச் செய்து அதன் தோலை உரித்துப் போர்த்துக்கொண்டாய்; தீயைத் தக்க இடத்திருக்கையில் ஏந்தினாய்; முப்புரம் எரிக்க எழுந்த போது மேருமலையை வில்லாகக்கொண்டு வளைத்துப் பூட்டினாய்; மதுரைத் திருவீதியில் வளையல் விற்றாய்; வந்திக்கிழவி தந்த பிட்டுக்கூலி உண்டாய்; அருள்தரு வீரமாகாளியம்மையை உன் இடப்பாகத்தில் கொண்டாய்; இங்ஙனமெல்லாம் செய்தநீ நால்வகைப் பாடல்களும் பாட எனக்கு அருள்புரிவாயாக.

நாற்பா : வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, அல்லது ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, வித்தாரகவிஎனினும்அமையும்.

அருள்தரு வீரமாகாளியம்மையார் வணக்கம்

அட்டநாக பந்தம்

2. *சீராய தூவே திருவே யவிரோதி*
வீராய் விநோதி விவேகிக - ஏராரஞ்
சோகுதிர வாரறு தூவின் மயிலோதி
யேகபர மாஞ்சோதி யே.

சீர்ஆய தூவே; திருவே; அவிரோதி;
வீராய்; விநோதி; விவேகிகள் - ஆர் ஆரம்
சோகுதிர, வார்ஆறு! தூஇன் மயில்ஓதி,
ஏகபரம் ஆம்சோதி யே.

கூட்டுமுறை

மயிலோதி வீராய் என்று கூட்டுக.

குறிப்புரை

சீர் ஆய — பெருமையுடையதாகிய; தூவே — பற்றுக்கோடாய் விளங்குகின்றவளே; திருவே — கண்டார் விரும்பும் தன்மை நோக்க முடையவளே; அவிரோதி—என்றும் நிலைகுலையாதவளே; வீராய்— வீரமாகாளியம்மையே; விநோதி — மேன்மையுடையவளே; விவேகி களார் — அறிஞர்களின்; ஆரம்—அணிகலன்; சோ—அரண், குதிர— செம்மையுற; வார்—நுண்ணிய; ஆறு—ஒழுக்கம்; தூ—தூயதாக்கி; இன்—இனியதாக்கும்; மயில்ஒதி—மயில்தோகை போன்ற கூந்தல் உடையவளே; ஏகபரமாம்—ஒப்பற்ற மேலானவளாகிய.

பொழிப்புரை

உயிர்க்குப் பெருமையுடையதாகிய பற்றுக்கோடே; கண்டார் விரும்பும்தன்மைநோக்கமுடையவளே;என்றும் நிலைகுலையாதவளே மேன்மையானவளே, அறிஞர்களின் அணிகலனாகவும் அரணாகவும் இருந்துஅவர்களின் அறிவு செம்மையுற, அவர்களின் நுண்ணிய ஒழுக்கத்தைத் தூயதாக்கி இன்பந்தரும் மயில்தோகை ஒத்த கூந்தலுடைய அருள்தரு வீரமாகாளியம்மையே; ஒப்பற்ற மேலானதாகிய ஒளி வடிவே உன் திருவடிகளுக்கு எங்கள் வணக்கம்.

மயில் — முதலாகுபெயர்

(இப்பாடல் சத்தப்பிரபந்தத்தில் அமைந்துள்ள கல்லல் ஸ்ரீ முத்து விநாயகர் மும்மணிமாலையில் இரண்டாம் காப்புப் பாடலாக அமைந்துள்ளது).

நூல்

நவசித்திர கவிமாலை

முரசபந்தம்

3. வாச தாரணி மலைவிலா ருமையே
காச தாரணி மலைவிலா ருமையே
பேச தாரணி மலைவிலா ருமையே
வாச தாரணி மலைவிலா ருமையே.

1. வாசம் தார்அணி மலைவிலார் உமையே;
2. காசம் தாரணி மலைவில்ஆர் உமையே;
3. பேச தார்அணி மலைவில்ஆர் உமையே;
4. வாசம் தார்அணி மலைவில்ஆர் உமையே.

குறிப்புரை

1. வாசம் + தார் + அணி + மலை + விலார் + உமையே
மணம் + மாலை + அணிந்த + மேருமலை + வில்லாகஏந்திய சிவபெருமான் + உமையம்மையே.

2. காசம் + தாரணி + மலை + வில் + ஆர் + உமையே
ஆகாயம் + இந்நிலவுலகு + ஈண்டிய + ஒளி + பொருந்திய + ஒளி வடிவினளே. (உமை=ஒளி)

3 பேச + தார் + அணி + மலை + வில் + ஆர் + உமையே
புகழத்தக்க + படை + அணிவகுப்பு + போர் + வில் + ஏந்திய + உமையம்மையே.

4. வாசம் + தார் + அணி + மலை + வில் + ஆர் + உமையே
வாழும் + வீடு + அன்பு + சூடிய + உள்ஒளி + பொருந்திய + உமையம்மையே.

பொழிப்புரை

மணம்மிக்க மாலையணிந்த, மேருமலையை வில்லாக ஏந்திய சிவபெருமானின் மனைவியாகிய உமையம்மையே; வானுலகிற்கும் நிலவுலகிற்குமாக ஈண்டியஒளி பொருந்தியவளாகிய ஒளி வடிவான வளே; புகழத்தக்க படை அணிவகுப்பை நடத்திப் போரிட வில்லேந் திய உமையம்மையே; நீ வாழும் வீடாக அன்பு சூடிய அடியவரின் உள்ளொளியில் பொருந்திய உமையம்மையே எனக்கு அருள்புரி வாயாக.

காசம்—ஆகாசம் என்பதன் முதற்குறை

இரத பந்தம்

4. வாளிலகு காழ்க்கைமா வர்த்தவரர்க் கேற்றசெல்வீ
தூளிலகு பொன்மயம்போற் றூர்க்கையுமா — வேளுவந்த
வாத்தியரு மாரு மயூர தலமழைத்தே
காத்தருளும் வீரமாகா ளி

வாள்இலகு காழ்க்கை மாவர்த்த அரர்க்குஏற்ற செல்வீ
தூள்இலகு பொன்மயம்போல் துர்க்குஐயும்; மா—வேள் உவந்த
ஆத்தியரும் ஆரும் மயூரதலம் அழைத்தே
காத்துஅருளும் வீரமாகா ளி

குறிப்புரை

வாள்—ஒளி; இங்குத் தீக்கு ஆகிவந்தது; காழ்—வலிமை; மாவர்த்தம்—கடவுள்; செல்வீ—செல்வியே;—எண்வகைஐஸ்வர்யம்—எண் செல்வம் உடையவளே: தூள்—பொடி; பொன்மயம்—அழகு மயமான; போல்—வாள்; துர்க்கு+ஐ—தீமை அறுக்கும் தலைவி மாவேள்—சிறந்த முருகப்பெருமான்; ஆத்தியர்—ஆத்திமாலைசூடிய சிவபெருமான்; ஆரும்—பிற தெய்வங்களும்; மயூரதலம்—மயூரகிரி—குன்றக்குடி,

பொழிப்புரை

தீ விளங்கும் வலியகையுடைய கடவுளான சிவபெருமானுக்கு ஏற்ற எண்வகைச் செல்வமும் உடையவளே; பகையைப் பொடியாக்கி அழகுமயமான வாள்ஏந்தித் தீமையறுக்கும் தலைவியாகவும், சிறந்த முருகப்பெருமானை உவந்த ஆத்திசூடிய சிவபெருமானாகவும், பிற கடவுளராகவும் இருந்து அடியவர்களைக் குன்றக்குடிக்கு அழைத்துக் காத்துஅருள்புரிகின்ற அருள்தருவீரமாகாளியம்மையே என்வணக்கம் ஏற்று அருள்புரிக.

கோமூத்திரிப் பந்தம்

5. கனம யூரந கேசர வேலையே
வினவு பாவவி மோசன வாலையே
கனவி யூகிந மோசுக வேலையே
கனக பாத விசேசசு வாலையே

கனம்மயூர நகம் ஈசரம் வேலையே
வினவு பாவ விமோசனம் வாலையே
கனம் வியூகி நமோ சுகம் வேலையே
கனகம் பாதம் விசேசம் சுவாலையே.

குறிப்புரை

கனம்—பொன்; மயூரநகம்—மயில்மலை—குன்றக்குடி; ஈசரம் —திருத்தலம்; வேலை—மலைமகள்; வினவு—கேட்டு ஆராய்ந்து; பாவவிமோசனம்—எப்பாவம் ஒழிக்கும்; வாலை—வாலைச் சத்தியே; கனம்—திரண்ட; வியூகி படைவகுப்புஉடையவளே; நமோ—நமது; சுகம்வேலையே—சுகக்கடலே—இன்பக்கடலே; விசேசம்– மேன்மை; சுவாலையே—சுடர்க்கொழுந்தே.

பொழிப்புரை

பொன்போலும் சிறந்த மயில்மலைத் திருத்தலத்தின் மலை மகளே; கேட்டுஆராய்ந்து எப்பாவம்ஒழிக்கும் வாலையாகியசத்தியே; திரண்ட படை வகுப்பு உடையவளே; நமது இன்பக்கடலே; பொன் போலும் திருவடி மேன்மையுடைய சுடர்க்கொழுந்தே உன் அடைக் கலமாகிய எம்மைக் காப்பாயாக.

கமல பந்தம்

6. பாரதர மாரமர பாரரர ரரரரு
பாரதிபொன் பாண்டியருய் பாக்கியமே - காரழகி!
தீரமா யூரகிரித் தேவனையும் பெற்றெடுத்த
வீரமா காளியருள் வீடு.

கூட்டுமுறை

பார, தர, மார, மர, பார என்ற ஐந்து சொற்களுடனும் ர்ர்ர்ர்ர் என்ற ஐந்தெழுத்துகளைக் கூட்டுக.

(முதலடியின் மூன்று நான்காம் சீர்களில் உள்ள ரகரங்கள் ஒற்று எழுத்துகள்) இவற்றுடன் முறையே உரர், பாரதி, பொன் பாண்டியர்உய், பாக்கியம் என்பவற்றைக் கூட்டுக. (பாரர் உரர், தரர்

பாரதி, மாரர்பொன், மரர் பாண்டியருய், பாரர் பாக்கியம் என்று அமையும். வீடு மயூரகிரி என்று கூட்டுக.

குறிப்புரை

பாரர்—பெருமையுடையோர்; உரம்—ஞானம்; தரர்—தரமுடையோர்; பாரதி—சொல்-புகழ்; மாரர்—இறந்தோர்; பொன்னுலகு—தேவருலகம்; மரர்—தேவர்கள்; பாண்டியர் உய்—பாண்டியரால் உய்திபெற; பாரர்—உலகோர்; பாக்கியம்—பேறு; கார்அழகி—கருப்பு அழகி; அருள்வீடு—அருள்வழங்கும் வீடு—புக்கில்.

பொழிப்புரை:

பெருமையுடையோர் ஞானம் பெறவும், தரமுடையோர் புகழ் பெறவும், இறந்தோர் பொன்னுலகு பெறவும், தேவர்கள் பாண்டியரால் உய்தி பெறவும், உலகோர் பேறு பெறவும் அருள்புரியும் கரிய நிறமுடைய அழகியும்; தீரனாகிய அருள்தரு சண்முகநாதப் பெருமானைப் பெற்றெடுத்தவளும் ஆகிய அருள்தரு வீரமாகாளியம்மை எழுந்தருளி அருள்வழங்கும் புக்கில்—வீடு மயூரகிரியாகும்.

மரர்—அமரர் என்பதன் முதற்குறை.

சுழிகுளப் பந்தம்

7. சுகமித தேவீ காளி
ககசுக னீதூ யேகா
மிகநினை யேதோ தூவீ
குகனைய னாயே னீதே.

சுகமிகு தேவீ! காளி!
கககக னீதூ யேகா
மிகைநினை ஏது ஓதூவீ;
குகன்ஐ! அன்நாயேன் ஏதே.

கூட்டுமுறை:-

இரண்டாமடியிலுள்ள "கககக" என்ற நான்கு உயிர்மெய் எழுத்துகளுடன் தனித்தனி முறையே னீதூயேகா என்ற நான்கு எழுத்துகளையும் கூட்டுக (கனீ, கதூ, கயே, ககா)

குறிப்புரை:-

கனீ—கன்னியே; கதூ—அரசே; கஏ—மயிலே; ககா—ஆன்மாவைக் காப்பாற்று; (க-ஆன்மா) நினை—உன்னையே; ஏது—மூலம்;

ஓதாவி—ஓதச் செய்; குகன்ஐ—முருகனுக்குத்தாயே; அன்நாயன்—நாய்த்தன்மை நீங்குவன்; (அன்-இன்மை உணர்த்தும் முன்னொட்டு) ஈதே—இதுவே என்நெறி முறையாகும்.

பொழிப்புரை:-

அடியவர்க்கு இன்பம் மிகுவிக்கும் தேவியே; காளியே; கன்னியே; அரசே; மயிலே; நல்வழியில் என்னை ஏவி, என் ஆன்மாவைக் காப்பாற்று. மிகுதியும் உன்னையே மூலப்பொருளாக ஓதச் செய்; முருகனுக்குத்தாயே; இதனால் நான் நாய்த்தன்மை நீங்குவேன். இதுவே என் நெறிமுறையாகும். அருள்புரிக.

இங்கு நாய்த்தன்மையாவது குறிக்கோளின்மை, தெளிவாகத் தலைவனை உணராமை, இனப்பகை முதலியன.

கனி - கன்னி என்பதன் இடைக்குறை. -5-

8. **சதுரங்க பந்தம்**

நீதி யதிதாயே போது மணியும்பர் நேசமுறு
மாதி தபோசத்தி யேழையா கும்பாவிக் காருயர்வீ
சோதியே கோமதி துர்க்கையா யன்பருந் தோத்தரிக்க
ஓதியே நீள்வரந் தாவீர காளி யுருகுமுனே.

நீதி அதிதாயே! போதும் அணிஉம்பர் நேசம்உறும்
ஆதி தபோசத்தி! ஏழைஆ கும்பாவிக் கார்உயர்வீ
சோதியே! கோமதி! துர்க்கு ஐயாய்! அன்பரும் தோத்தரிக்க
ஓதியே நீள்வரம் தா வீரகாளி உருகுமுனே.

கூட்டுமுறை:-

ஏழையாகும் பாவி வீ கார் உயர்சோதியே என்றும். அன்பரும் ஓதியே தோத்தரிக்க என்றும், வீரகாளி உருகுமுனே நீள் வரம்தா என்றும் மாற்றிக் கூட்டுக.

குறிப்புரை:-

அதி—அதிட்டித்துநிற்கும்—நிலைப்படுத்தும்; போது—கற்பக மலர்; உம்பர்—தேவர்கள்; தபோசத்தி—தவமேயாக விளங்கும் சத்தியே; பாவி வீ—பாவியாகிய நான் விரும்பும்; கார்—அழகு; துர்க்கு—தீமையழிக்கும்; ஐஆய்—தலைவியாய்; உருகுமுனே—இப்பிறப்பு உருகி அழியுமுன்; நீள்வரம்—மிக்கமேன்மை.

பொழிப்புரை :-

நீதியை நிலைப்படுத்தும் தாயே, கற்பகமலரும் சூடியதேவர்கள் விருப்பம் மிகும் ஆதியான தவமேயாக விளங்கும் சத்தியே, அற்பனாகஉள்ள பாவியாகியநான் விரும்பும் அழகுயர்ந்த சோதியே, கோமதித்தாயாகவும், தீமை அழிக்கும் தலைவியாகவும், அடியவர் எல்லாரும் போற்றித் துதிக்கவந்த அருள்தரு வீரமாகாளியம்மையே! இப்பிறப்புஉருகி அழியுமுன் மிக்கமேன்மையை எனக்குஅருள்வாயாக

முனே—முன்னே என்பதன் இடைக்குறை. -6

9 **மாலை மாற்றுக் கவி**

வேளு யாதிக மாதுரு சாளைவே
தாளு வாகன மாமையி னாளிதா
தாளி னாயிம மானக வாளுதா
வேளை சாருது மாகதி யாளுவே.

வேள்அயாது இகம் மாதுஉரு சாளைவே
தாளு வாகன மாமையின் ஆள் இதா;
தாளினாய் இமம்ஆன; க ஆள் அதா
வேளை; சாருதும் மாகதி ஆளுவே.

கூட்டுமுறை:-

மாமையின் இதா ஆள் என்றும், இமம் ஆனதாள் என்றும், க ஆள் வேளை அதா என்றும், மாகதி ஆளவேசாருதும் என்றும் மாற்றிக் கூட்டுக.

குறிப்புரை:-

வேள்—விருப்பம்; அயாது—தளராது; இகம்—இம்மையிலேயே; சாளை—இறங்கி வருகின்றவளே; வேதாளவாகன—பூதவாகனமுடையவளே; மாமை—அழகு; இமம்—பனி-குளிர்ச்சி; க—ஆன்மா; அதா—அதுவே; மாகதி—வீடுபேறு; சாருதும்—சார்ந்தோம்.

பொழிப்புரை:-

விருப்பத்தில் தளராது இம்மையிலே அருளப் பெண்உருத் தாங்கி இறங்கி வருகின்றவளே; பூதவாகனமுடையவளோ; அழகுற இதோ வந்தேன் என்று கூறி என்னை ஆள்வாயாக. குளிர்ந்த திருவடிகளையுடையவளே; ஆன்மாவை நீஆட்கொள்ளும் வேளை அதுவே· (இதோ வந்தேன் என்கின்ற நேரம் அதுவே நீ ஆட் கொள்ளும் வேளை) வீடுபேறு ஆளவே உன்னைச் சார்ந்தோம்; ஆட்கொள்க.

இமம் ஆனதாள் : "நனைந்தனைய திருவடி" என்பர்அப்பரடிகள். -7-

''முறையாய்ப் பிரிக்க இதுமொத்தம் மூன்று வெண்பாவாம்.''

1. இங்குங்கா மாகாளி யேழை மலையாம
லங்குங்கா வாகா யலைதருங்கண்—மங்கையே
கூகா வலாவெனவே கூடியழாக் கைங்கிரிய
மீகாக லாமலையா ளீ.

2. மாகாளி யேழை மலையாம லங்குங்கா
வாகா யலைதருங்கண் மங்கையே—கூகா
வலாவெனவே கூடியழாக் கைங்கிரிய மீகா
கலாமலையா ளீஇங்குங் கா.

3. மலையாளி இங்குங்கா மாகாளி ஏழை
மலையாம லங்குங்கா வாகாய்— அலைதருங்கண்
மங்கையே கூகா வலாவெனவே கூடியழாக்
கைங்கிரிய மீகா கலா

இங்ஙனம் முறையாய்ப் பிரிந்து நின்று மூன்று வெண்பாக்கள் ஆகியுள்ள இம்மூன்றுக்கும் பொருள் ஒன்றே என்க. எனவே,

இங்கும்கா மாகாளி ஏழை மலையாமல்
அங்கும்கா வாகாய் அலைதரும்கண் — மங்கையே
கூகா வலாஎனவே கூடிஅழாக் கைங்கிரியம்
ஈகாக லாமலைஆ ளீ.

கூட்டுமுறை:-

மாகாளி, அலைதரும் கண் மங்கையே, மலையாளீ, காகலா, கூகாவலா எனவே ஏழை மலையாமல் இங்கும் வாகாய்க் கைங்கிரியம் ஈ; கூடி அழாகா; அங்கும்கா.

குறிப்புரை.-

அலை—உலகு; தரும்—ஈனும்; கண்—கருணை; மலையாளீ—குன்றக்குடி மலைப்பாறையில் எழுந்தருளி ஆள்பவளே; காகல்—இன்சொல்; கூ—உலகம்; மலையாமல் - தடுமாறாமல்; இங்கும்—இப்பிறப்பிலும்; வாகாய்—பக்குவமாக; கைங்கிரியம்—தேவபணி; ஈ—அருள்க; கூடிஅழா—சுற்றத்தார் கூடி அழாமல் சீவன் முத்தி தந்து; அங்கும்—வீட்டுலகிலும்.

பொழிப்புரை:-

அருள்தரு வீரமாகாளியம்மையே, உலக உயிர்களை ஈன்று கருணை காட்டும் தாயே, குன்றக்குடி மலைப்பாறையில் எழுந்தருளி

ஆள்பவளே. இன்சொல் பேசுகின்றவளே, உலகைக் காப்பவளே. இத்தகையவள் நீ என்பதால் ஏழையாகிய நான் தடுமாறாமல்இருக்க' இந்தப் பிறப்பிலேயே பக்குவமாகத் தேவபணி செய்ய அருள்வாயாக; சுற்றத்தார் கூடியழாதவாறு சீவன் முத்தி தந்து காப்பாயாக; வீட்டுலகிலும் காப்பாயாக.

அலை – உலகு — உலகஉயிர்கள்—இடவாகுபெயர். -8-

11. ## திரிபங்கிக்கவி

''முறையாய்ப் பிரிக்க இதில் மூன்று வஞ்சிப்பா வரும்.''

ஞானசத் தீவீர மாகாளி யேநந்தி நாதனுஞ்சொல்
வானமுத் தீயா ரமதா ளியேமந் திராய்மயின்மா
மோனவித் தீதீர மாவாளி யேமுந்தை யாய்முறையாய்
தானவத் தேபார மாவேழை யேன்வந்து சார்ந்தனனே.

வஞ்சிப்பாக்கள் மூன்றாமாறு.

1. ஞான சத்தீ
வான முத்தீ
மோன வித்தீ
தான வத்தே

2. வீரமா காளியே
ஆரம தாளியே
தீரமா வாளியே
பாரமா ஏழையேன்.

3. நந்தி நாதனுஞ்சொல்
மந்தி ராய்மயின்மா
முந்தை யாய்முறையாய்
வந்து சார்ந்தனனே.

இவை மூன்றும் வஞ்சித்துறைகள்.

குறிப்புரை:-

நந்திநாதன்— நந்தியெம்பெருமான்; சொல்—புகழ்; வான முத்தீ —மேலான சாலோக, சாமீப, சாரூபமுத்திகளான அபரமுத்திகள்; ஆரம் அதுஆளி—மாலைகளாச் சூடி அவற்றை ஆள்பவள்; மந்திராய்—ஓங்காரமந்திரமே; மயின்மா—மயிலே; மோனவித்தீ— மோன நிலையை எம்முள் விதைப்பவளே; தீர—முழுமையாக; மாஆளியே —மேன்மையை ஆள்பவளே;முந்தையாய் —முந்தியவளே; அநாதியே; முறையாய்—நெறிமுறையானவளே; தான் உனக்கு; அவத்தே—வீணாக.

பொழிப்புரை:-

ஞானசத்தியே, அருள்தரு வீரமாகாளியம்மையே, நந்தியெம்பெருமானும் புகழும் மேலான சாலோக, சாமீப, சாரூபம் என்கிற அபர

மூர்த்திகள் மூன்றினையும் மாலைகளாகச் சூடி ஆள்பவளே, பிரணவமே, மயிலே, மோனநிலையை எம்முள் விதைப்பவளே, முழுமையாக மேன்மையை ஆள்பவளே, அநாதியே, நெறிமுறையானவளே, உனக்கு வீண் பாரமாக ஏழையாகிய நான்வந்துசேர்ந்தேன்; எனினும் என்னைக் காத்தருள்க. -9-

நிரோட்டக மடக்குப் பஞ்சகம்

12 கட்கக்கைக் காளி கனகச் சிகிநாகாய்
கட்கக்கைக் கான்றாரார் கண்ணிஅணி - கட்(கு) இனியாய்
ஆரணியே ஏழைய்யன்ஏங்(கு) அல்லலைஏக்(கு) அல்லலைக் கேட்(டு)
ஆரணிஏய்க் கின்றனைநீத்(து) ஆள்.

கூட்டுமுறை:-

நிரோட்டகம் — உதடுகள் ஒட்டும் எழுத்துகளை நீக்கி அமைந்தபா. கட்கக்கை ஆர் கான்றார் என்று மாற்றிக் கூட்டுக.

குறிப்புரை:-

கட்கம்—வாள்; கனகம் - பொன்; சிகிநாகாய்—மயில்மலைக்குரியவளே; ஆர்—உலக உயிரனைத்தும்: கான்றார்—காக்கப் பெற்றன; கண்ணி—தலைமாலை; கட்கு—கண்ணுக்கு; ஆரணியே—காளிதேவியே; ஏங்கு—அஞ்சும்; அல்லல்—துன்பம்; ஏங்கு அல்லல்—ஏற்றவினை; ஆரணி—சுழல்காற்று

பொழிப்புரை:-

திருக்கையில் வாள் ஏந்திய அருள்தரு வீரமாகாளியம்மையே, பொன் ஒத்த மயில்மலைக்குரியவளே, உன் வாளேந்திய கையால் உலகஉயிரனைத்தும் காக்கப்பெற்றன. தலை மாலையணிந்த கண்ணுக்கு இனிய அழகியே, காளியே, ஏழையேனாகிய என் ஏறும் வினைகளையும் ஏற்றவினைகளையும் சுழல்காற்றை ஒத்தவளே, நீ கேட்டு அவற்றிலிருந்து என்னை விடுவித்து ஆள்வாயாக.

13 கங்கர்அக லா(து)இ கனைகைக் கனைகைஅன்னாய்
கங்கர் அகநிலன்க னிசிகிக்கற் - சங்கரி
அஞ்(சு)ஏலம் சேர்அக்காய் அஞ்சேல்அஞ் சேல்என்றே
நெஞ்சே நெகிழ்ந்தளியாய் நீறு.

(இரண்டாமடி மூன்றாம் சீரின் ''னி'விட்டிசைத்து நின்று தனிக்குறிலானது. ''விட்டிசைத்தல்லால் தனிக்குறில் நேரசை என்று ஒட்டப்படாது'' என்பது யாப்பருங்கலக்காரிகை)

கூட்டுமுறை:-

கங்கர் அகலாது கனஇகல் நகைக்கை அன்னாய் — என்று மாற்றிக்கூட்டுக.

குறிப்புரை:-

கங்கர்—பாறை;கங்கர்—கங்கைதாங்கியசிவபெருமான்;இகல்—வெற்றி; நகை—இன்பம்; கை—ஒப்பனை; அன்னாய்—தாயே; அக நிலம்—மனமாகிய நிலத்தை; கனி—கனிய—இளக: சிகிக்கல்—மயில் மலை; அஞ்சுஏலம் சேர் அக்காய்—ஐவகை மணப் பொருளாலான மயிர்ச்சாந்து பூசிய தாயே; நீறு—திருநீறு.

பொழிப்புரை:-

குன்றக்குடிப் பாறையை விட்டு நீங்காதிருந்து கனத்தவெற்றியாகிய இன்ப ஒப்பனையுடைய அன்னையே; கங்கை தாங்கிய சிவபெருமானின் உள்ளமாகிய நிலத்தைக்கனியச் செய்யும் மயில்மலையில் எழுந்தருளி அருள் வழங்கும் சங்கரியே; ஐவகைமணப் பொருளாலான மயிர்ச் சாந்து பூசிய தாயே; நீ நெஞ்சு நெகிழ்ந்து என்னை "அஞ்சேல் அஞ்சேல்" என்று கூறித்திருநீறு வழங்கி வாழ்த்துவாயாக. -2-

14 ஆழிஅணை யான்இளையாய் அங்கயற்கண் ஆத்தாளே
ஆழிஅணி ஆர்அக்கை ஆனந்தி - தாழைநறும்
கஞ்சக் கழலாய் கதிகாட்(டு) அதிகாரி
அஞ்சிற்(கு) அழகிஎன்னை ஆள்.

கூட்டுமுறை

ஆழி ஆர் அணி அக்கை என்று மாற்றிக் கூட்டுக.

குறிப்புரை:-

ஆழி அணையான்—திருபாற்கடலில் பள்ளிகொண்ட திருமால்; இளையாய்—தங்கையே;ஆழி—கடல்; ஆர்—உலகம்; அணி—நன்மை; அக்கை—தாய்;தாழ்—விரலணி-மெட்டி; ஐ—மென்மை; கஞ்சக்கழல்—தாமரை போன்ற திருவடி; கதி—வீடுபேறு; அம்+சில்+கு—அழகிய தேருக்கு. (சில்—தேர்)

பொழிப்புரை

திருப்பாற்கடலில் பள்ளி கொண்ட திருமாலுக்குத் தங்கையே, அங்கயற்கண்ணியாகிய தாயே, கடல்சூழ்ந்த உலகிற்கு நன்மை செய்யும் தாயே, அதனால் இன்புறுகின்றவளே, மெட்டியணிந்ததும் மென்மையானதும் மணமிக்க தாமரை போன்றதும் ஆகிய திருவடி

யுடையவளே, விடுபேற்றுக்கு வழிகாட்டும் அதிகாரம் படைத்தவளே, அழகிய தேருக்கு அழகூட்டும் அழகியே என்னை ஆள்வாயாக.

கழல்—தனியாகு பெயராய்த் திருவடி குறித்தது. -3-

15 அட்டியிலா(து) ஆயிரத்தெட்(டு) அண்டத்(து) அளந்(து) அளித்(து)ஈண்
டிட்டசிகி நாகத்தார் எம்தாயே - கட்டழகி
கற்கண்டே தேனே கனியே கழையேநின்
ஏற்கண்டேன் எல்கண்டை யே.

கூட்டுமுறை:-

கழையே எல்கண்டையே நின் எல் கண்டேன் என்று மாற்றிக் கூட்டுக.

குறிப்புரை

அட்டி—குறை; அளந்து—மதித்து; அளித்து—காத்து; ஈண்டிட்ட—பெருமை செறிந்த; சிகிநாகத்தார்—மயின்மலையில்எழுந்தருளிஅருள் வழங்கும் அருள்தரு சண்முகநாதப் பெருமான்;எம்—எமக்கு; கழை—கரும்பு; எல்—ஒளி; கண்டை—பருமணி.

பொழிப்புரை:-

குறைவில்லாது ஆயிரத்தெட்டு அண்டங்களையும் மதித்துக் காத்தலால் பெருமை செறிந்த மயின்மலையில் எழுந்தருளி அருள் வழங்கும் அருள்தரு சண்முகநாதப்பெருமானுக்கும் எமக்கும் தாயே, கட்டழகியே, கற்கண்டே, தேனே, கனியே, கரும்பே, ஒளிவீசும் பருமணியே உன்னுடைய ஒளிவடிவைக் கண்டேன்; அதனால் நல் வாழ்வு பெற்றேன்.

16 அஞ்சேல்கை தீர அறு(கு)ஏறி என்அருகே
செஞ்சேல் கடைக்கண் தெரிசனம்தா - இஞ்சியிலே
தேனும் சிதரும் சிதரும்கார்க்(கு) ஆக்கை அலர்
கானும் செழிசிகிக்கற் க.

கூட்டுமுறை -

இஞ்சியிலே...கற் க, கைதீர அஞ்சேல்(என்று) அறுகு ஏறி.. தாஎன்று முடிக்க.

குறிப்புரை:-

இஞ்சி—குளம்; சிதரும்—பூந்தாதும், சிந்தும்; கார்க்கு—மேகம் தவழுவதற்கு; ஆக்கை—தன்உடம்பைத்தரும்; அலர்கான்—மலர்

நிறைந்த சோலை; சிகிகல் —மயின்மலை; க —மயிலே, கை—சிறுமை அறுகு — சிங்கம்.

பொழிப்புரை -

குளத்தில் தேனும் பூந்தாதும் சிந்தக்கூடியதும், மேகம் தவழத் தன் உடம்பைத்தரும் மலர் செறிந்த காடு செழித்ததும் ஆகிய மயின் மலையில் எழுந்தருளி அருள் வழங்கும் மயிலே (அருள்தரு வீரமா காளியம்மையே) நீ என் சிறுமை தீர ''அஞ்சேல்'' என்றுகூறிச் சிங் கத்தின் மீதேறி என் அருகில் வந்து கருணையாற் செம்மையானதும் கெண்டை மீன்போன்றதுமான உன் திருக்கடைக்கண் தெரிசனம் தந்தருள்வாயாக. -5-

17. சிலேடை வெண்பாப் பதிகம்

குன்றா விடையதிலும் கூர்மடவார் கூந்தலிலும்
மன்றார் இருக்கும் மயின்மலையே-அன்(று)அசத்தான்
தொண்(டு)அழற்கண்(டு) உண்ணீர்ப்பூந் தொட்டிலிட்டான் ஆறுமின்பால்
உண்(டு)அழக்கண்(டு) ஓடிவந்தாள் ஊர்.

கூட்டுமுறை -

விடையதிலும் மன்றார் இருக்கும்; கூந்தலிலும் மன்றார் (மன் தார்) இருக்கும் என்று ஈரிடத்தும் தனித்தனி கூட்டுக. கூர் என்பதனை — மன்கூர்தார் என்று கூட்டுக. ஆறு என்பதனை அழல், பூந்தொட்டில் ஆகியவற்றுடனும் கூட்டுக. அன்று... ஊர் குன்றா ... ...மயின்மலையே என்று முடிக்க.

குறிப்புரை:-

குன்றா - எக்காலத்தும் ஆற்றல் குன்றாத; விடை - அறத்தின் குறியீடான எருது; கூர்—மிக்க; மன்றார்—மன்றாடியாகிய சிவபெரு மான்; மன் கூர் தார்—பெருமை மிக்க மாலை; அன்று—அநாதியே; அசத்தான்—சுட்டிக் கூறத்தக்க பெருமையுடைய சத்துப்பொருளான பரசிவம்; தொண்டு அழல் ஆறு கண்டு—தொழத்தக்க தீப்பொறிகள் ஆறினை வெளிப்படுத்தி; உண்ணீர்—பருகத்தக்க நீர் உடைய சரவ ணப்பொய்கை; பூந்தொட்டில்—தாமரைத்தொட்டில்; ஆறுமின்பால்— ஆறு கார்த்திகைப் பெண்டிர் சுரந்தபால்; ஓடிவந்தாள் — ஓடிவந்து மார்போடு அணைத்த உமையம்மை.

பொழிப்புரை -

அநாதியே சுட்டிக்கூறப்பெறும் சத்தாகிய பரசிவம், தொழத் தக்க தீப்பொறிகள் ஆறினை வெளிப்படுத்தி, அவற்றைப் பருகத்தக்க

நீருடைய சரவணப்பொய்கையில் மலர்ந்த ஆறு தாமரைத்தொட்டியில் இட, கார்த்திகைப் பெண்டிர் அறுவர் சுரந்த பாலுண்டும் அக்குழவிகள் ஆறும் அழக்கண்டு ஓடிவந்து மார்போடு அணைத்த அருள்தரு வீரமாகாளியம்மை எழுந்தருளி அருள் வழங்கும்ஊர், எக்காலத்திலும் ஆற்றல் குன்றாத அறத்தின் குறியீடான எருதின் மீது மன்றாடியாகிய சிவபெருமான், தேனாற்றுநாதராக எழுந்தருளியிருந்து அருள் புரிவதும் பெண்களின் கூந்தலில் பெருமைமிக்க மலர்மாலை இருப்பதும் ஆகிய மயின் மலை-குன்றக்குடியாகும். -1-

18 புள்அலைசொல் பூவையர்கண் போதும் உல(வு)ஆடவரும்
வள்ளலைநேர் ஒக்கும் மயின்மலையே—உள்ளும்அரன்
ஐஆ னனத்தும் அதோமுகத்தும் ஆ(று)உருவாம்
மெய்யானைப் பெற்றவள்வாழ் வீடு.

கூட்டுமுறை:-

கண்போது வள்ளலை (வள் + அலை) நேர்ஒக்கும். ஆடவர் வள்ளலை நேர் ஒக்கும் என்று தனித்தனி கூட்டுக. உள்ளும் வீடு, புள்ளலை.. மயின்மலையே என்று முடிக்க.

குறிப்புரை:-

புள்-பறவை-குயில்; அலை—தோற்கடித்த; பூவையர் – மகளிர்; கண்போது—கண்மலர்; வள் அலை – வளமான அலை; உள்ளும் + அரன் + ஐ + ஆனனத்தும் —நினைந்து போற்றத்தக்க பரசிவத்தின் ஐந்து திருமுகத்தும்; அதோமுகத்தும்—கீழ்நோக்கிய திருமுகத்தும், உருவாம் மெய்யான் —அழகாம் திருமேனியுடைய முருகப்பெருமான்; பெற்றவள் —பெற்ற அருள்தரு வீரமாகாளியம்மை. வீடு—புக்கில்.

பொழிப்புரை:-

நினைந்து போற்றத்தக்க பரசிவத்தின் ஐந்துதிருமுகத்திலிருந்தும் கீழ்நோக்கியதாகிய அதோமுகத்திலிருந்தும் வெளிப்பட்டு ஆறு அழகாம் திருமேனி கொண்டவனான முருகனைப் பெற்றெடுத்த அருள்தருவீரமாகாளியம்மை எழுந்தருளி அருள்வழங்கும் புக்கில்—சொந்தவீடு; குயிலை வென்ற இனிய சொற்களைப் பேசும் மகளிர் கண்மலர்கள் வளப்பம்மிக்க அலையை ஒத்துப்புரண்டு விளங்குவதும்; உலாவுகின்ற ஆடவர்கள் வள்ளல்களை ஒத்து விளங்குவதும் ஆகிய இவற்றுக்கு இடமான மயின் மலையாகும்.

விளக்கம்.-

பெருமானின் ஐந்து திருமுகங்களாவன; 1. படைத்தலைப்

புரியும் பளிங்கு நிறத்து ஈசானம்-உச்சி நோக்கியது; 2. காத் தலைப்புரியும் பொன்னிறத்துத் தத்புருடம் - கிழக்கு நோக்கியது; 3. அழித்தலைப்புரியும் கருநிறத்து அகோரம்-தெற்கு நோக்கியது; 4. மறைத்தலைப்புரியும் செந்நிறத்து வாமதேவம்-வடக்கு நோக்கியது; 5. அருளைப் புரியும் வெண்ணிறத்துச்சத்யோஜாதம்-மேற்கு நோக்கியது. -2-

19 தேனா(று) இருபுறத்தும் சிங்கார ஆலயத்து
மானா அலர்சார் மயின்மலையே - தானாக
ஆயிரத்தெட்(டு) அண்டம் அடங்கல்ஆள் சூரன்அஞ்ச
வாயிரத்ன வேல்வே(டு)ஆய் ஆர்வு.

கூட்டுமுறை:-

தேனாறு இருபுறத்தும் மானாஅலர்சார் என்றும், சிங்கார ஆலயத்தும் ஆனா அலர்சார் என்றும் ஈரிடத்தும் தனித்தனி கூட்டுக. தானாக...ஆய் ஆர்வு, தேனாறு...மயின்மலையே என்று முடிக்க.

குறிப்புரை:-

தேனாறு குன்றக்குடியருகில் பாயும் ஓராறு (எனவே இங்கு எழுந்தருளிய சிவபரம்பொருள் தேனாற்று நாதர் என்று போற்றப் பெறுகிறார். இவர் மலையடிவாரக் கீழக்கோயிலில் எழுந்தருளி அருள் வழங்குகிறார்) மானா—பிரமன்; அலர்—தாமரை, மலர்கள்; ஆனா—அளவற்ற; வாய் –புகழ்; ஆர்வு—எழுந்தருளியுள்ள இடம்.

பொழிப்புரை:-

தான் ஒருவனாகவே ஆயிரத்தெட்டு அண்டங்களையும் ஆண்ட சூரன் அஞ்ச, புகழ்வாய்ந்த இரத்தினவேல் தாங்கிய வேடுவனாகிய அருள்தரு சண்முகநாதப்பெருமானுக்குத் தாயாகிய அருள்தரு வீரமாகாளியம்மை அருள்வழங்க எழுந்தருளியுள்ள இடம்; தேனாற்றின் இருபுறத்தும் பிரமனின் இருக்கையாகிய தாமரைமலர்கள் பூத்திருப்பதற்கு இடமானதும், அழகிய திருக்கோயிலில் அளவற்ற மலர்கள் குவிந்திருப்பதற்கு இடமானதும் ஆகிய மயின்மலையாகும். -3-

20 துள்ளிக்கொள் வாளைக்கும் தூயவேள் நற்றோட்கும்
வள்ளிக் கொடிசார் மயின்மலையே — குள்ளமுனி
கண்(டு)அமர் இந்தவிதம் என்றோதித் தந்(து)அரக்கர்
கண்டம் அரிந்தவர்தாய் காணி.

கூட்டுமுறை:-

வாளைக்கும் வள்ளிக்கொடிசார், நல்தோட்கும் வள்ளிக்கொடி

சார் என்று ஈரிடத்தும் தனித்தனி கூட்டுக. குள்ளைமுனி.......தாய் காணி, துள்ளி...மயின்மலையே என்று முடிக்க.

குறிப்புரை:-

வாளை—வாளைமீன்; வேள்—அனைவரும் விரும்பும் முருகன்; வள்ளிக்கொடி - ஒருவகைக்கொடி கொடியொத்த வள்ளி நாச்சியார்; குள்ளைமுனி—அகத்தியர்; கண்டு அமர் இந்தவிதம் – பார்த்து, போரிடும்விதம்இது; கண்டம்அரிந்தவர்—கொன்றவர்; காணி—நிலம்-ஊர்.

பொழிப்புரை:-

அகத்தியமுனிவர் கண்டு போரிடும்விதம் இது என்று சொல்ல அவ்விதம் போரிட்டு அரக்கரைக் கொன்ற அருள்தரு சண்முகநாதப் பெருமானுக்குத் தாயாகிய அருள்தரு வீரமாகாளியம்மை எழுந்தருளி அருள்வழங்கும் ஊர், துள்ளிக் குதிக்கும் வாளைமீனுக்கு வள்ளிக் கொடிசார்பாக இருப்பதும், தூயவனும் எல்லாராலும் விரும்பப்படுகின்றவனுமாகிய முருகனின் நன்மையேதரும் தோளைக் கொடி போன்ற வள்ளி நாச்சியார் சார்ந்து இருப்பதும் ஆகிய மயின் மலையாகும்.

-4-

நல்தோட்த—இரண்டிற்கு நான்குவந்த உருபுமயக்கம்.

21 தண்(டு)ஈ முளரியினும் சாலையினும் மாமகத்தும்
வண்டீ விளங்கு மயின்மலையே — பெண்டீர்
மயக்(கு)அடுத்த வேடுவன்போல் வள்ளிமுன்போந்(து) ஏசா
மயக்(கு)அடுத்த வேல்சேய்தாய் வாழ்வு

கூட்டுமுறை:

தண்டுஈ முளரியின் வண்டுஈ விளங்கும். சாலையின் வண்டீ (வண்டி) விளங்கும். மா-மகத்து வண் தீ விளங்கும் என்று வேறுவேறு பிரித்துத் தனித்தனி மூவிடத்தும் கூட்டுக.

பெண்டீர்...தாய்வாழ்வு.தண்டு...மயின் மலையேஎன்றுமுடிக்க.

குறிப்புரை -

தண்டு ஈ—தண்டுகள் ஈன்ற;முளரி - தாமரை;சாலை—போக்குவரத்துச் சாலை; வண்டு + ஈ—வண்டுகளும் தேனீயும்;வண்டீ—வண்டிகள்; மாமகம் பெருமைபொருந்திய வேள்விகள்; வண் தீ—வளமான வலஞ்சுழிக்கும் தீ; பெண்டீர் மயக்கு-பெண் பித்து; ஏசாமயக்கு—குற்றமற்ற மயக்கம், ஆட்கொள்ளும் ஆசை; சேய் செம்மைநலம் சான்றபெருமான்.

பொழிப்புரை:-

பெண்பித்துக் கொண்ட வேடனைப்போல வள்ளிநாச்சியார் முன்புவந்து குற்றமற்ற மயக்கம் கொண்ட வேலேந்திய செம்மை நலம் சான்ற அருள்தரு சண்முகநாதப்பெருமானுக்குத் தாயாகிய அருள்தரு வீரமாகாளியம்மை வாழும் இடம் குளத்திலுள்ள தாமரைத் தண்டுகள் ஈன்ற தாமரைகளில் வண்டும் தேனீயும் மொய்ப்பதுப், போக்குவரத்துச் சாலையில் வண்டிகள் நெருங்கி விளங்குவதும். பெருமைபொருந்திய வேள்வியில் லெம் சுழிக்கும் வளமான தீ விளங்குவதும் ஆகிய மயின்மலையாகும்.

வண்டீ (வண்டி), பெண்டீர் (பெண்டிர்) என்பன செய்யுள் விகாரங்கள்.

முளரியில் வண்டு ஈ, சாலையில் வண்டி. மாமகத்து வண்தீ என்று ஒருபாடலிலேயே முறையே நிலவளம், வணிகவளம் (பொருளாதார வளம்) மக்கள் மனவளம் குறித்துள்ளமை நோக்கத்தக்கது.

மாமகத்து வண்தீ மறுமை நோக்கிய வளம் எனினும் அமையும்.

-5-

22 பார்த்தோர் மனம்கவரும் பாவையர்மார் பாடரவும்
வார்த்தைக்கும் நிற்கும் மயின்மலையே — சீர்த்தி
தருவான் தினைவளர்த்த தண்நுதல்முன் வேங்கைத்
தருவான் தொடவளர்ந்தான் தாய்க்கு.

கூட்டுமுறை -

மனம்கவரும் வார்த்தைக்கும், பாடுஅரவும்வார் தைக்கும் என்று தனித்தனி ஈரிடத்தும் கூட்டுக. சீர்த்தி...வளர்ந்தான் தாய்க்கு, பார்த்தோர் ...மயின்மலையே என்று முடிக்க.

குறிப்புரை

பாடரவு—பாடலிசை; வார்த்தை— இன்சொல்; வார்-|தைக்கும் — நுட்பமான தாளக்கட்டுக்கும்; சீர்த்தி தருவான்—மேன்மை தரும் பொருட்டு; தண்நுதல்முன்—குளிர்ந்த மேலிடத்தின் — பரணின் முன்னே; தரு - மரம், வான்தொட—வானுயர.

பொழிப்புரை

வள்ளி நாச்சியாருக்கு மேன்மை தரும்பொருட்டு, அவர் தினை வளர்ந்த குளிர்ந்த பரண் முன்னே வேங்கைமரமாக வானுயரவளர்ந்த அருள்தரு சண்முகநாதப் பெருமானுக்குத் தாய் ஆகிய அருள்தரு வீரமாகாளியம்மையின் வாழிடம், காண்கின்றவரின் உள்ளத்தைக்

கொள்ளை கொள்ளும் இன்சொல்லுக்கும், மகளிர் பாடலிசைக்கு ஏற்ற நுட்பமான தாளக்கட்டுக்கும் தானே என்று நிற்கும் மயின்மலையாகும்.

சீர்த்தி தருவான் — தருவான் என்பதுவானீற்று வினையெச்சம்.

-6-

23 கொதியா நரகினுள்ளும் கோபுரவாய்க் குள்ளும்
மதியா தவர்போம் மயின்மலையே — நிதியார்
வதிபன் னகத்(து)உறங்கு மாயோன் மருகன்
அதிபன் அகன்தாய் அகம்.

கூட்டுமுறை:-

நரகினும் மதியாதவர் போம், கோபுரவாய்க்குள் மதி ஆதவர் போம் என்று ஈரிடத்தும் தனித்தனி கூட்டுக. நிதியார் .... தாய் அகம், கொதியா ..மயின்மலை என்று முடிக்க.

குறிப்புரை:-

கொதியா — கொதிக்கும். மதியாதவர் — திருவருளாற்றலை மதிக்காதவர்; மதி + ஆதவர் — மதி நலம் சான்ற தவத்தோர்; நிதி + ஆர் + வதி — கடலில் பொருந்தி வாழும்; பன்னகம்— ஆதிசேடன்; அதிபன் — அரசன்; அகன்தாய்—பெருமை பொருந்திய தாய்: அகம் - வீடு.

பொழிப்புரை:-

திருப்பாற்கடலில் பொருந்தி வாழும் ஆதிசேடனாகிய மெத்தையில் பள்ளிகொள்ளும் திருமாலுக்கு மருமகனும், அண்டங்களுக்கெல்லாம் அரசனும் ஆகிய அருள்தரு சண்முகநாதப் பெருமானுக்குப் பெருமைபொருந்திய தாயாகிய அருள்தரு வீரமாகாளியம்மை எழுந்தருளி அருள் வழங்கும் வீடு, கொதிக்கின்ற நரகத்தில் திருவருளாற்றலை மதிக்காதவர் போவதற்கும், திருக்கோயில் கோபுரவாய்க்குள் மதிநலம் சான்ற தவத்தோர் போவதற்கும் காரணமான மயில் மலையாகும்.

-7-

24 தையலர்கைக் கங்கணமும் சன்யாசி ஆனவரு
மையலை நீக்கும் மயின்மலையே—பைஅரவத்
தாரான் தவழ்ந்(து)அடிசார் சாமி இனிப்பிறப்பே
தாரான் தவம்தருஆய் சார்பு.

கூட்டுமுறை:-

கைக்கங்கணம் மையலை நீக்கும், சன்யாசி ஆனவரும் ஐயலை நீக்கும் என்று ஈரிடத்தும் தனித்தனி கூட்டுக பைஅரவ... . ஆய் சார்பு, தையலர் .. மயின்மலை என்று முடிக்க.

குறிப்புரை:-

கங்கணம்—மஞ்சள்காப்பு; மையல்—காமநோக்கு; ஐயலை—பிறவியாகிய பெருநோயை (ஐ—பெருநோய்) தார்—மாலை; தவழ்ந்து—குனிந்து; அடிசார்—முன்சார்ந்த; சாமி சிறப்புடையவன்; தவம்தருஆய்—(பிறவியை அறுத்த முருகனைத்) தன் தவத்தால் தந்த அம்மை.

பொழிப்புரை -

படமுடைய பாம்பை மாலையாகச் சூடிய சிவபெருமானும் (பிரணவப் பொருள்கேட்க) குனிந்து முன் சார்ந்த சிறப்புடையவனும், தன் அடியார்க்கு இனிமேல் பிறப்பே தராதவனும் ஆகிய அருள்தரு சண்முகநாதப் பெருமானைத்தன் தவத்தால் தந்த அருள்தரு வீர மாகாளியம்மை சார்ந்துள்ள இடம், மகளிர் தம்கையில் நோன்பின் பொருட்டுக் கட்டிய மஞ்சட் காப்பு மையலை நீக்குதற்கு இடமானதும், துறவிகள் தம் பிறவிநோய் நீக்குவதற்கு இடமானதும் ஆகிய மயின் மலையாகும். -8-

25 இந்திரரும் போர்வீரர் என்பார் புயத்துணையு
மந்த்ரகிரி யைநேர் மயின்மலையே—முந்த
விடைக்கொடியார் சேரும் இராகவர்தங் கைச்சி
இடைக்கொடியார் மாகாளி இல்.

கூட்டுமுறை:-

இந்திரரும் அந்தரகிரியைநேர், புயத்துணையும் மந்தரகிரியை நேர்என்று ஈரிடத்தும் தனித்தனி கூட்டுக. முந்த..... மாகாளி இல், இந்திரரும் ..மயின்மலை என்று முடிக்க. கொடியிடையார் என்று மாற்றிக் கொள்ளுக.

குறிப்புரை:-

துணை—அளவு; அந்தரகிரி—வானுலகமலை; மந்தரகிரி—மந்தரமலை; முந்த—அநாதியே; விடைக்கொடியார்—இடபக்கொடியுடைய சிவபெருமான்; இராகவர்—திருமால்.

பொழிப்புரை:-

அநாதியே இடபக்கொடி ஏந்திய சிவபெருமானைச் சேர்கின்றவரும், திருமாலுக்குத் தங்கையும் ஆகிய கொடிபோலும் இடையுடைய அருள்தரு வீரமாகாளியம்மையின் சொந்தவீடு—புக்கில்; இந்திரர்கள் இது தேவலோகத்து மலையோ என்று எண்ணுதற்கு இடம்தருவதும்,

போர்வீரர்களின் இருதோள்களை ஒத்த மந்தரமலையைப் போன்ற தும் ஆகிய மயின் மலையாகும். -9-

26 வேலைஅருள் பொன்னியொடு மென்கொடியார்
கொண்டையிலும்
மாலை அகலா மயின்மலையே—வாலைஎனும்
மாபசுத்தாய் வந்த மகிபன்அடி யார்க்(கு) எளியன்
மாபசுந்தாய் வாழ்வ சதி.

கூட்டு முறை -

பொன்னியோடு மாலை அகலா, கொண்டையிலும் மாலை அகலா என்று ஈரிடத்தும் தனித்தனி கூட்டுக. வாலை வாழ்வசதி. வேலை... மயின்மலை என்று முடிக்க.

குறிப்புரை :-

வேலை - நற்காலம்; பொன்னி — திருமகள்; மாலைஅகலா மயக்கத்தைவிட்டு நீங்காத; மாலைஅகலா — மலர்மாலை விட்டு நீங்காத; வாலை இளம்பருவமுடையவள்; மா + பசு + தாய் — பெருமை பொருந்திய + ஆன்மாக்களுக்கு + தாய்; வந்த — ஈன்ய; மகிபன் — தலைவன் — முருகன். மா + பசுந்தாய் — பெருங்கருணையாம் பசிய நிறமுடைய தாய், வசதி — வீடு

பொழிப்புரை :-

வாலையும், பெருமைபொருந்திய ஆன்மாக்களுக்செல்லாம் தாயும், அவள் ஈன்ற தலைவனும் அடியார்க்கு எளிதில் அருள் வழங்குகின்றவனும் ஆகிய அருள்தருசண்முகநாதப்பெருமானுக்கும் உயிர்கள் மீதும் கொண்ட பெருங்கருணையால் பசிய நிறங்கொண்டவளாகிய அருள்தரு வீரமாகாளியம்மை வாழும் வீடு. நற்காலம் அருளும் திருமகளே கண்டு.தன் மயக்கம் நீங்காமைக்கு இடமானதும், மெல்லிய கொடி போன்ற மகளிரின் கொண்டைகளில் மலர் மாலை அகலாதிருப்பதற்கு இடமானதும் ஆகிய மயின் மலையாகும்.

திருமகள் தன்மயக்கம் நீங்காமைக்குக்காரணம் குன்றக்குடியின் செல்வ வளமும், கொண்டை மாலை அகலாமைக்குக் காரணம் இதன் மங்கலத்தன்மையுமாகும். -10-

27

4. கலித்துறைப்பதிகம்

சிறந்தது வோதிரி லோகாதி அந்தம் செயப்புரியப்
பிறந்தது வோபக வான்தேவர் பேசப் பசிக்(கு) அமுதம்
சுரந்தது வோஇல் துறந்தது வோசிவ காமமிஞ்சி
மறந்தது வோவீர மாதா வராததேன் வாழ்விக்கவே.

குறிப்புரை:-

அந்தம் - முடிய- முழுமையாக; பறந்தது — மிகவேகமாகச் சுற்றியது; பகவான்—திருமால்; பேச - புகழ; இல்—வீடுபேறு

பொழிப்புரை:-

அருள்தரு வீரமாகாளித்தாயே! நீ மிக மிகச் சிறந்தவள் என்ற கர்வமா? மூன்று உலகம் முழுமையும் வெற்றி கொள்ள மிகவேகமாகச் சுற்றியதா? திருமால் முதலிய தேவர்கள் புகழ ஞானசம்பந்தருக்குப் பால்கறந்து கொடுத்த பெருமையை எண்ணியா? பரம்பொருளுக்குரிய -வீட்டை-வீடுபேற்றை விட்டு வெளியேறிய வெட்கமா? உன் கணவனாம் சிவபரம்பொருள் மீது நீ கொண்ட பக்தி அளவுகடக்க என்னை மறந்ததாலா? எம்மை வாழ்விக்க ஏன் வரவில்லை? இவற்றுள் எத்தடையும் உனக்கில்லை; வாழ்விக்க எழுந்தருள்க. -1-

28 பூப்பிட்ட தோமலை கூப்பிட்ட தோசிவன் பொங்குநஞ்சைச்
சாப்பிட்ட தோசம(து) ஏற்பட்ட தோநின் தளிதிருநாள்
காப்பிட்ட தோதனு மூப்பிட்ட தோகடல் தீப்பட்டதோ
மாப்பிட்ட தோவீர மாதா வராததேன் வாழ்விக்கவே.

குறிப்புரை:-

மலை—நீ பிறந்த இமயமலை; சமது—சண்டை; தளி—திருக்கோயில்; தனு—உடம்பு; கடல்—கருணைக்கடல்; மா—பெருமை; பிட்டதோ—சின்னாபின்னமாய் அழிந்ததோ.

பொழிப்புரை:-

அருள்தரு வீரமாகாளித்தாயே; நீ பூத்தாயா? நீ பிறந்து வளர்ந்த இமயமலை உன்னை அழைக்க அங்குச் சென்று விட்டாயா? உன் கணவன்—சிவன் நஞ்சு உண்டதால்கூட இருந்து கவனிக்க வேண்டும் என்பதாலா? உன் கணவனோடு உனக்குச் சண்டை ஏற்பட்டதா? உன் திருக்கோயிலில் திருநாள் காரணமாகக் காப்புக் கட்டிவிட்டதா? அநாதியான உன் உடம்பு மூப்பால் தளர்ந்ததா? உன் கருணைக் கடல் தீப்பற்றி அழிந்துவிட்டதா? உன் பெருமையெல்லாம் சின்னாபின்னாப்பட்டு அழிந்துவிட்டதா? எம்மை வாழ்விக்க ஏன் வரவில்லை? இவற்றுள் எத்தடையும் உனக்கில்லை, வாழ்விக்க எழுந்தருள்க. -2-

29 ஒலித்தது வோமகு டன்போரில் நின்ற உரத்தயுத்தத்(து)
அலுத்தது வோஅடி யார்க்கே அருள அலைந்ததனால்
சலித்தது வோபர னோ(டு)ஆடும் அந்தச் சபையில்உன்கால்
வலித்தது வோவீர மாதா வராததேன் வாழ்விக்கவே.

குறிப்புரை:-

ஒலி-அளவு கடந்த சினம்; மகுடன்-மகிடாசுரன்; நின்ற-நடந்த; உரத்த - மிகப்பெரிய; அந்தச்சபை – திருவாலங்காட்டுச் சபை.

பொழிப்புரை:-

அருள்தருவீரமாகாளித்தாயே; என்மீது நீஅளவு கடந்தசினங்-கொண்டாயா? மகிடாசுரனுடன் நடந்தகடும்போரில் அலுப்பு ஏற்பட்டதா? அருள்புரிய அடியவரைத்தேடி நீ அலைந்து தக்கவர் யாரும் கிடைக்கவில்லையே என்ற சலிப்பா? பரம் பொருளோடு திருவாலங்-காட்டுச் சபையில் ஆடிய ஊர்த்துவ தாண்டவத்தால் உன் கால் வலித்ததா? எம்மைவாழ்விக்க ஏன் வரவில்லை? இவற்றுள் எத்தடையும் உனக்கில்லை; வாழ்விக்க எழுந்தருள்க. -3-

30 களைத்தது வோமத யானையைத் தூக்கிக் களித்ததனால்
இளைத்தது வோபர தேசியோ(டு) ஆடினோம் என்றவெட்கம்
தளைத்தது வோதன பாரப் பெருங்கிரி தந்(து)இடையை
வளைத்தது வோவீர மாதா வராததேன் வாழ்விக்கவே.

குறிப்புரை:-

மதயானை—திருவருள்மதம் பொழியும் விநாயகர்; பரதேசி - பிச்சாடனனான சிவன்; தளைத்தல்—தடுத்தல்; வளைத்தல்– நோகடித்தல்; தந்து – நூல்.

பொழிப்புரை -

அருள்தரு வீரமாகாளித்தாயே; என்னைக் கடைத்தேற்ற முயன்றும் நான் கடைத்தேறாததால் மனம் களைத்தாயா? திருவருள் மதம் பொழியும் விநாயகரைத் தூக்கியே வைத்துக்கொண்டிருந்ததால் ஏற்பட்ட இளைப்பா? பிச்சாடனனாகிய சிவனுடன் கூடிவாழ்ந்து விட்டோமே என்ற வெட்கமா? உன் திருமார்பாகிய பெரியமலைகள் நூல் போன்ற உன் இடையை வருத்தி நோகடித்தனவா? எம்மை வாழ்விக்க ஏன் வரவில்லை? இவற்றுள் எத்தடையும் உனக்கில்லை; வாழ்விக்க எழுந்தருள்க. -4-

31 கருவின தோகற்(று)உருகின தோபத்தர் கண்டுகொண்டு
சருவின தோசதி யாளரைக் கொன்று தருக்(கு) உரைவாள்
உருவின தோநிர்வி கற்ப சமாதியில் ஒய்ந்துமனம்
மருவின தோவீர மாதா வராததேன் வாழ்விக்கவே.

குறிப்புரை:-

கறுவுதல்—கருவுதல்ஆனது செய்யுள் விகாரம், கருவுதல்—தணியாக்கோபம் கொள்ளுதல்; கற்று—கல்+து உருகினதோ—பாறை வருத்த உடல் உருகினதா? து—வருத்த; சருவினதோ—தொல்லைப் பட்டதா? கொன்று—கொல்ல; தருக்குஉரை—சூளுரை; மருவுதல்—பொருந்துதல்.

பொழிப்புரை:-

அருள்தரு வீரமாகாளித்தாயே; என் மேல் தணியாக் கோபம் கொண்டதாலா? குன்றக்குடியில் நீவீற்றிருக்கும் பாறைவருத்த உடல் இளைத்ததாலா? அடியவர்களின் மிகப்பெரிய கூட்டத்தைக் கண்டு அவர்களிடம் தொல்லைப் பட்டதாலா? சதிகாரர்களைக் கொல்லச்சூள் உரைத்து வாளை உறையிலிருந்து உருவிவிட்டதாலா? நிர்விகற்ப சமாதியில் உன் மனம் இடையறாது மூழ்கிப் பொருந்தியதாலா? எம்மை வாழ்விக்க ஏன் வரவில்லை? இவற்றுள் எத்தடையும் உனக்கில்லை; வாழ்விக்கஎழுந்தருள்க. -5-

32 இறைத்தது வோஇரு பாலரின் ஆடல் எழில்மனத்தைக்
கறைத்தது வோகலி காலக்கொடியரைக் கண்டு செக்(கு)இட்(டு)
அறைத்தது வோஅடி யேன்செய்த பாவம் அனைத்தும் உன்னை
மறைத்தது வோவீர மாதா வராததேன் வாழ்விக்கவே.

குறிப்புரை:-

இறைத்தல்—கண்டபடிவாரி இறைத்தல்; இருபாலர்- விநாயகர் முருகன்; ஆடல்—சண்டை; கறைத்தல்—களங்கப்படுத்துதல்; மறைத்தல்—தடுத்தல்.

பொழிப்புரை.-

அருள்தரு வீரமாகாளித்தாயே; நீ உன் கருணை தீரும்படிக் கண்டவாறு வாரிவாரி இறைத்துவிட்டதாலா? உன் மக்களாகிய விநாயகரும் முருகனும் தம்முள் சண்டையிட அது உன் மனத்தைக் களங்கப்படுத்திவிட்டதா? இவ்வுலகில் கலிகாலக் கொடியவர்களை ஒழிக்க அவர்களை ஒவ்வொருவராகச் செக்கிலிட்டு அறைத்துக்

கொண்டிருபபதாலா? உன் அடியவனாம் நான்செய்த பாவமனைத்தும் திரண்டு நீ வரும் வழியை மறைத்ததாலா? எம்மை வாழ்விக்க ஏன் வரவில்லை? இவற்றுள் எத்தடையும் உனக்கில்லை, வாழ்விக்க எழுந்தருள்க. -6-

33 நழுவின தோமனம் கந்தற்குப் பால்தந்து நற்குளத்தில்
கழுவின தோஅத னாற்கை உளைந்ததோ கல்தருக்கோன்
தழுவின தோசரி யாய்ப்போற்றி லான்எனத் தான்மதித்து
வழுவின தோவீர மாதா வராததேன் வாழ்விக்கவே.

குறிப்புரை:-

கல்தருக்கோன்—கல்லாலமர நிழல் அமர்சிவம்; வழுவினதோ—கைவிட்டாயா?

பொழிப்புரை:-

அருள்தரு வீரமாகாளித்தாயே, என்னைக் காத்துவரும் உன் கருணை மனம் என்னைக் கை நழுவவிட்டுவிட்டதா? கந்தவேளுக்குப் பாலூட்டி மகிழ்ந்த உன் மனக்கருணையை அத்திருக்குளத்திலேயே (சரவணப்பொய்கை) கழுவிவிட்டாயா? அதனால்உன்கை நொந்ததா? கல்லாலமர நிழல் அமர்ந்த பரசிவத்தைத் தழுவி என்னை மறந்தாயா? இவன் நம்மைச் சரியாகப் போற்றவில்லை என்று எண்ணி என்னைக் கைவிட்டாயா? எம்மை வாழ்விக்க ஏன் வரவில்லை? இவற்றுள் எத்தடையும் உனக்கில்லை. வாழ்விக்க எழுந்தருள்க. -7-

34 நிருத்தம தோபல நீடூழி காலம் நிலைத்(து)அயர்ந்த
விருத்தம தோவிரு த்தாப்பையல் ஏற்கு விளங்(கு)உன்அன்பில்
பொருத்த மதோஅரி யாம்அண்ணன் அண்டர் புரிக்(கு) உழலும்
வருத்த மதோவீர மாதா வராததேன் வாழ்விக்கவே.

குறிப்புரை:-

நிருத்தம்—திருக்கூத்து; விருதாப்பையல்—பிழை மலிந்தவன்; அண்டர்புரி—வைகுண்டம்; உழலும்—அரக்கரிடம் துன்புறும்.

பொழிப்புரை:-

அருள்தரு வீரமாகாளித்தாயே! நீ திருக்கூத்து ஆடிக்கொண்டிருக்கும் காரணத்தாலா? அநாதி தொட்டே செயற்பாட்டில் நிலைத்திருப்பதால் ஏற்பட்ட உடல் முதிர்ச்சியாலா? பிழைமலிந்தவனாகிய எனக்கு, என்பொருட்டு விளங்கும் உன் அன்புடன் பொருத்தப்பாடு

இல்லாததாலா? திருமாலாகிய உன் அண்ணன் தன்வைகுண்ட பதவி யைத் தக்க வைத்துக் கொள்ள அரக்கர்களிடம் படும் துன்பத்தைக் கண்ட வருத்தத்தாலா? எம்மை வாழ்விக்க ஏன்வரவில்லை? இவற்றுள் எத்தடையும் உனக்கில்லை; வாழ்விக்க எழுந்தருள்க. -8-

35 வயங்கின தோவரு பாதையில் திக்கு வழிதவறித்
தியங்கின தோஅடி யார்வாழ்வ ரென்ற செருக்(கு)
ஏழுந்து
முயங்கின தோமரு மான்மாரன் செற்ற முறையைஎண்ணி
மயங்கின தோவீர மாதா வராததேன் வாழ்விக்கவே.

குறிப்புரை:-

வயங்கினதோ—தெளிவுகொண்டதாலா? தியங்கினதோ—திண் டாடுகிறதாலா? செருக்கு—மயக்கம்; முயங்கினதோ—பிடிவிடாதவாறு கட்டித் தழுவினதாலா? மாரன்—மன்மதன்; செற்ற—கொல்லப்பட்ட

பொழிப்புரை

அருள்தரு வீரமாகாளித்தாயே! இவன் ஈடேறமாட்டான்என்று தெளிவு கொண்டதாலா? எனக்கு அருள்புரிய நீ வரும் வழியில் திசை யும் வழியும்தவறித் திண்டாடுகிறதாலா? நாம் அருள் புரிந்தால் இந்த அடியவன் கடைத்தேறி நல்வாழ்வு பெற்றுவிடுவான் என்ற மயக்கம் தன்பிடிவிடாதவாறு உன்னைக் கட்டித்தழுவியுள்ளதாலா? உன் மருமகன் மன்மதன் உன் கணவனது நெற்றிக்கண் தீயால், உடலைக் கூடக் காணமுடியாதவாறு சாம்பலாகுமாறு கொல்லப்பட்ட முறையை எண்ணி மயங்குவதாலா? எம்மை வாழ்விக்க ஏன் வரவில்லை? இவற்றுள் எத்தடையும் உனக்கில்லை. வாழ்விக்க எழுந்தருள்க. -9-

36 ஞானம தோஅறு(கு) ஓடிய தோசிவ நாதமதுப்
பானம தோகுறப் பாவையைப் பாலன் பரிசித்ததஓர்
ஈனம தோஇள வாலிபன் நேர்ஏப் படிநிற்ப(து)என்
மானம தோவீர மாதா வராததேன் வாழ்விக்கவே.

குறிப்புரை:-

ஞானம்—இவன்தேறான் என்கிற தெளிவு; அறுகு—சிங்கம்; நாதம்—மணச்சுகம், சிவநாதமதுப்பானம்—சிவத்தின் மணச்சுகம் கொண்ட மதுப்பானம்—சிவத்தியானம்; பாலன்—இளையமுருகன், பரிசித்த—தீண்டி மணந்த, ஈனம்—குடிக்குவந்த தாழ்வு,

பொழிப்புரை:-

அருள்தரு வீரமாகாளித்தாயே! இவன்தேறான் என்கிற

தெளிவு ஏற்பட்டதாலா? நீ ஏறும் சிங்கம் உன்னை விட்டு ஓடி விட்டதா? சிவத்தின் மணச்சுகம் கொண்டமதுப்பானம்-சிவத்தியானம் பருகிய மயக்கத்தாலா? குறத்தியாகிய வள்ளியை உன் இளைய மகனாகிய முருகன் தீண்டி மணந்தான் என்பதால் குடிக்கு வந்த தாழ்வினாலா? இளவாலிபனாகிய இவன் முன்னே இளம் பெண்ணாகிய நாம் எப்படி நிற்பது என்ற வெட்கத்தினாலா? எம்மை வாழ்விக்க ஏன் வரவில்லை? இவற்றுள் எத்தடையும் உனக்கில்லை, வாழ்விக்க எழுந்தருள்க.

கும்மி

கும்மியடி பெண்காள் கும்மியடி - இளங்
கொங்கை அணங்குகாள் கும்மியடி
வெம்மிடி தீர்த்திடும் வீரமா காளியாள்
மெல்லியல் கும்மியடியுங்கடி.

குறிப்புரை

அணங்குகாள் - தேவலோகத்துப் பெண்களைப் போன்றவர்களே. வெம்மிடி- கொடிய வறுமை(வறுமை; மனம்,சொல், செயல், செல்வ வறுமைகளைக் குறிப்பது) -1-

38 அங்கிங் கெனும்திரு மந்திரத்தாள் - எனை
ஆளும் நவகோண யந்திரத்தாள்
குங்குங் கெனப்பணி லங்கள்மு ழங்கிடும்
குன்றைவாழ் வீரமா காளியம்பாள்.

குறிப்புரை

அங்குஇங்கு எனும்-எங்கும் உள்ள;திருமந்திரம்-திருக்கோயில்;பணிலம் சங்கு. -2-

39 சங்கரன் பாகத்தி ருந்தவளாம் - சர்வ
சாத்திர ஞாயம்தெ ரிந்தவளாம்
குங்குமம் சந்தம் கதம்பமக மழ்ந்திடும்
குன்றைவாழ் வீரமா காளியம்பாள்

குறிப்புரை:-

சந்தம்-சந்தனம். -3-

40 ஈரேழு லோகமும் பெற்றவளாம் - மலர்
ஏறும் கரும்புவில் உற்றவளாம்
கூரேழு மேகமும் கோபுரம் தங்கிடும்
குன்றை வாழ் வீரமா காளியம்பாள்

குறிப்புரை:-

கூர்-மிகுதியாக: ஏழுமேகம்-சம்வர்த்தம், ஆவர்த்தம், புட்கலாவர்த்தம், சங்காரித்தம், துரோணம் காளமுகி நீலவருணம் என்பன. -4-

41 அஞ்செழுத் தெட்டெழுத் தானாளாம் - ஊமைப்
பிஞ்செழுத் தாகிய மானாளாம்
குஞ்சரம் தேர்பரி கோடி சூழவரும்
குன்றைவாழ் வீரமா காளியம்பாள்

குறிப்புரை:-

அஞ்செழுத்து-சிவயநம, எட்டெழுத்து-ஓம்ஆம் ஔம் சிவயநம (ஒற்றுநீக்கிஎட்டு) ஊமைஎழுத்து-சி-சிவம் குறிப்பது. பிஞ்சுஎழுத்து-வ-சத்தி குறிப்பது, மானாள்-மான் போன்றவள்; குஞ்சரம்-யானை, பரி-குதிரை. -5-

42 அம்பிகை என்னும் மலர்க்கொடியாள் - இந்த
அண்டத் தினிமே லெனைப் படையாள்
கும்பமுனிமுதல் உம்பரும் போற்றிடும்
குன்றைவாழ் வீரமா காளியம்பாள்

குறிப்புசை:-

கும்பமுனி-அகத்தியர், உம்பர்-தேவர், படையாள்-பிறப்பிக்கமாட்டாள்-விடுபேறுதருவாள். -6-

43 வாடிடா வாசமலர்ச் சடையாள் - நம்பி
வந்தவர் துன்பந்தீர்க் கச்சடையாள்
கோடி மதியொன்று கூடுதல் போல்ஒளிர்
குன்றைவாழ் வீரமா காளியம்பாள்

குறிப்புரை:-

சடை-திருமுடிச்சடை, பிரபைசூழ்ஒளி, -7

44 ஆகம வேத அபிப்பிராயி - என்னை
அடிமை கொண்டவா லப்பிராயி
கோகிலம் கிள்ளை புறாமயில் கூடிடும்
குன்றைவாழ் வீரமா காளியம்பாள்

குறிப்புரை:-

அபிப்பிராயி-உட்கருத்தானவள்; வாலப்பிராயி - பன்னிரண்டுவயது உடையவள்; கோகிலம்-குயில். -8-

45 சாமள ரூபச வுந்தரியாம் — எனைத்
தற்காத் தருள்நி ரந்தரியாம்
கோளமள வல்லி குலாசல வல்லியாம்
குன்றைவாழ் வீரமா காளியம்பாள்.

குறிப்புரை:-

சாமளம்-பசுமை; நிரந்தரி - என்றும் உள்ளவள்; கோமளவல்லி -அழகுக் கொடி - ஒத்தவள்; குலம் அசலம் வல்லி - மலைக்குலம் பெற்ற கொடி ஒத்தவள் - மலைமகள் -9-

46 பத்தர்க்குக் கட்டுப்ப டுபவளாம்—நல்ல
பாத்திரப் பிச்சைஇ டுபவளாம்
சுத்திபெ றும்பெரி யோர்மிகக் கூடிடும்
குன்றைவாழ் வீரமா காளியம்பாள்.

குறிப்புரை -

நல்லபாத்திரம் - நல்லடியார்; சுத்தி - அடக்கம்; பிச்சைஇடல் - திருவருள் வழங்குதல். -10-

47 மந்திர சித்திவ ரங்கொடுப்பாள் — ஏமன்
வந்தால்வ ராதேஎன் றேதடுப்பாள்
கொந்தல ருங்கருங் குந்தள வல்லியாம்
குன்றைவாழ் வீரமா காளியம்பாள்.

குறிப்புரை:-

கொந்தலரும் - கொத்தாகமலரும்; குந்தளம் - கூந்தல். -11-

48 தீராத நோயெலாம் தீர்த்திடுவாள்—தொண்டர்
சித்தம்க ளித்திடப் பார்த்திடுவாள்
கூறா அருட்கவி கூறுகென் பாள்திருக்
குன்றைவாழ் வீரமா காளியம்பாள்.

குறிப்புரை:-

கூறுகென்பாள் - கூறுகான்பாள். -12

49 நம்பின பேரைக்கை விட்டறியாள் — எந்த
நாளும் அழியாச்சின் னஞ் சிறியாள்
கும்பிடும் அன்பர்கு லதெய்வ மாய்வரும்
குன்றைவாழ் வீரமா காளியம்பாள். -13

50 முத்துமூக் குத்திஅ லங்காரி — மலர்
மோகன மாலைகொள் சிங்காரி
கொத்தும லர்நவ ரத்தினப் பொன்முடிக்
குன்றைவாழ் வீரமா காளியம்பாள். -14-

51 தண்டைசி லம்பணி மெல்லடியாள் — இளந்
தங்கத்து கிலணி பூங்கொடியாள்
குண்டலம் கொப்பும்க திர்போல் ஒளிர்குழைக்
குன்றைவாழ் வீரமா காளியம்பாள். -15-

குறிப்புரை:-

தண்டை, சிலம்பு-கால்அணிகள், குண்டலம், கொப்பு,குழை-காதுஅணிகள் தங்கத்துகில்-சரிகைப் புடவை.

52 துக்கப்ப டாதேஎன் றாதரிப்பாள் - எந்தன்
தூக்கத்தி லும்வந்து தூதுரைப்பாள்
குக்குட கேதனன் கோயில் விளங்கிடும்
குன்றைவாழ் வீரமா காளியம்பாள் -16

குறிப்புரை:-

குக்குடம்-சேவல். கேதனன்-கொடியுடைய முருகன்,

53 மாலை அணிந்துமுன் தோற்றிடுவாள் - கோபம்
வந்தால்உ லகெல்லாம் நீற்றிடுவாள்
கோலம யில்போலும் பாலாஎன் றென்னையாள்
குன்றைவாழ் வீரமா காளியம்பாள் -17-

குறிப்புரை:-

தோற்றிடுவாள்-தோன்றுவாள்; நீற்றிடுவாள்-நீறு ஆக்குவாள்-முற்றும் அழிப்பாள்

54 தண்டமிழ் வான்மழை பெய்திடுவாள் - என்தன்
சத்துரு சங்காரம் செய்திடுவாள்
குண்டலி சத்தியாம் கோமள உத்தமி
குன்றைவாழ் வீரமா காளியம்பாள் -18-

குறிப்புரை:-

சத்துரு சங்காரம்-பகைவரை அழித்தல்.

55 அல்லும்ப கலும்முன் வந்துநிற்பாள் - எனக் (கு)
ஆறுதல் சொல்லிஅ முதளிப்பாள்
கொல்லைதொ றுமண மல்லிகை பூத்திடும்
குன்றைவாழ் வீரமா காளியம்பாள் -19-

குறிப்புரை:-

அமுது - உணவு

56 தண்டைச தங்கைச லசலென - மனித்
தாவடம் மின்னிப்ப ளபளக்க
கொண்டையில் மாலைகு முகுமெனவரும்
குன்றைவாழ் வீரமா காளியம்பாள்

குறிப்புரை:-

தாவடம் கழுத்திலிருந்து நீண்டுதொங்கும் சங்கிலிவகை அணிகலன். (தாழ்வடம்)
-20-

57 தென்பனை யூர்உறை புண்ணியவான் - அருள்
சேருமுத் துச்சாமிக் கண்ணியவான்
அன்புடன் பெற்றக ணபதிபாடலை
அணியும் குன்றைமா காளியம்பாள்

குறிப்புரை:-

இப்பாடல்களின் ஆசிரியர் அமரர் கணபதியாபிள்ளை. இவர் தந்தை முத்துச்சாமி என்பதும், சொந்தஊர் தென்பனையூர் என்பதும் இதனால் அறிய வருகின்றன இராசபாளையம் அருகில் உள்ளது தென்பனையூர். -21-

கும்மி-11

58 சூலாயுத மெடுத்துத் துணிந்துல கேழும் வென்ற
மேலான தெய்வமெனும் மைவிழிப் பெண்ணே - குன்றை
வீரமா காளி என்னும் பைங்கிளிக் கண்ணே.

குறிப்புரை:-

உலகு ஏழு - மேல் உலகு ஏழு, கீழ் உலகு ஏழு, மேல்ஏழ் உலகு - பூலோகம், புவலோகம், சுவலோகம், தபோலோகம், மகாலோகம், சத்தியலோகம் என்பன. கீழ்ஏழ் உலகு - அதலம் விதலம், சுதலம், தராதலம், மகாதலம், இரசாதலம், பாதலம் என்பன.
-1-

59 ஆதி பரா பரியே அம்பிகையே என்பவர்முன்
வேதமுடி வாகிவரு மைவிழிப்பெண்ணே — குன்றை
வீரமா காளிஎனும் பைங்கிளிக் கண்ணே.

குறிப்புரை:-

பராபரி - பரமேசுவரி,
-2-

60 எட்டூர் அலைந்தாலும் இரந்தே குடித்தாலும்
விட்டுப்பிரி வேனோநான் மைவிழிப் பெண்ணே — குன்றை
வீரமா காளிஎனும் பைங்கிளிக் கண்ணே. -3-

61 உன்னை மறந்தேநான் உலகத்தா ரோடலையேன்
மின்னும் பரஞ்சோதி மைவிழிப் பெண்ணே — குன்றை
வீரமா காளிஎனும் பைங்கிளிக் கண்ணே. -4-

62 அன்ன நடையழகும் ஐங்கோலப் பட்டழகும்
முன்னழகும் பின்னழகும் மைவிழிப் பெண்ணே — கண்டு
மோகம் உறாதருள்வாய் பைங்கிளிக் கண்ணே. -5-

பொழிப்புரை:-

ஐங்கோலப்பட்டு — குத்துக்கோடு, கிடைக்கோடு, நெளி, சுழி, பூவேலை என்ற ஐவகை வேலைப்பாடமைந்தபட்டு.

63 சேலை அழகும்மணச் சிந்தூரப் பொட்டழகும்
காலழகும் கையழகும் மைவிழிப் பெண்ணே — கண்டு
காமம் உறாதருள்வாய் பைங்கிளிக் கண்ணே. -6-

64 வால வயதழகும் மதிநேர் முகத்தழகும்
மேலழகும் சூலழகும் மைவிழிப் பெண்ணே — கண்டு
மிரளா தருள்புரிவாய் பைங்கிளிக் கண்ணே. -7-

குறிப்புரை:-

வாலவயது — இளவயது (12 வயது) சூல் அழகு -- உலகைக் கருக் கொண்ட அழகு

65 முல்லைக் குழலழகும் முத்தாரத் தோளழகும்
பல்லழகும் சொல்லழகும் மைவிழிப் பெண்ணே — கண்டு
பாயா தருள்புரிவாய் பைங்கிளிக் கண்ணே. -8-

66 கங்கணக் காப்பழகும் களபத் தனத்தழகும்
சிங்காசனத்தழகும் மைவிழிப் பெண்ணே - கண்டு
தேங்கா தருள்புரிவாய் பைங்கிளிக் கண்ணே. -9-

குறிப்புரை:-

களபம் - கலவைச்சந்தனம், தேங்காது - எம்மனம் கெடாது'

67 அல்லி இதழழகும் ஆரமணி மூக்கழகும்
சல்லாவின் வாரழகும் மைவிழிப் பெண்ணே - கண்டு
தயங்கா தருள்புரிவாய் பைங்கிளிக் கண்ணே. -10-

குறிப்புரை

இதழ் - உதடு, ஆரம்-மாலை, அணிமூக்கு-அழகிய மூக்கு, சல்லா-மிகமெல்லிய ஆடை-பூந்துகில், வார்-நீண்டு தொங்குதல்.

68 நூல்போல் இடையழகும் நுதலின்வெண் ணீற்றழகும்
சேல்போல் விழியழகும் மைவிழிப் பெண்ணே - கண்டு
திக்கா தருள்புரிவாய் பைங்கிளிக் கண்ணே. -11-

குறிப்புரை:-

திக்காது - திகைக்காதிருக்க.

69 புருவக் கருப்பழகும் புன்முறுவல் வாயழகும்
இருகன்னச் சீரழகும் மைவிழிப் பெண்ணே - கண்டு
ஏங்கா தருள்புரிவாய் பைங்கிளிக் கண்ணே. -12-

70 சங்கக் கழுத்தழகும் தங்கப்பதைக் கத்தழகும்
தொங்குமலர்த் தாரழகும் மைவிழிப் பெண்ணே - கண்டு
தொழவே அருள்புரிவாய் பைங்கிளிக் கண்ணே. -13-

குறிப்புரை:-

பதைக்கம் பதக்கம், தார்-திருமார்புமாலை.

71 வள்ளையாம் காதழகும் வைரமணித் தோடழகும்
புள்ளிமயில் போலழகும் மைவிழிப்பெண்ணே - கண்டு
போற்ற அருள்புரிவாய் பைங்கிளிக் கண்ணே. -14-

குறிப்புரை:-
வள்ளை-வள்ளைக் கொடி,

72 கொண்டை முடிப்பழகும் கூறால் வயிற்றழகும்
நண்டுமுழந் தாளழகும் மைவிழிப் பெண்ணே - கண்டு
நமஸ்காரம் செய்யஅருள் பைங்கிளிக் கண்ணே. -15-

குறிப்புரை:-
கூறால்-கூறுஆல்-புகழத்தக்க ஆலிலை, நண்டு-திரண்ட,

73 இலுமிச்சம் பழம்போல் இலங்குகுதி காலழகும்
துலங்கும் நகத்தழகும் மைவிழிப் பெண்ணே - கண்டு
துதிக்க அருள்புரிவாய் பைங்கிளிக் கண்ணே. -16-

குறிப்புரை:-

எலுமிச்சையின் உருட்சி, குதிகாலுக்கு உவமை

74 அம்பறாத் தூணியைப்போல் அமைந்தகணைக் காலழகும்
சண்பகப்பூந் தாளழகும் மைவிழிப் பெண்ணே - கண்டு
சார்தற்(கு) அருள்புரிவாய் பைங்கிளிக் கண்ணே. -17-

குறிப்புரை:-
சார்தல் — சேர்ந்து வணங்குதல்

75 முத்துப்பல் லக்ஷழகும் மொய்தாதி மார்அழகும்
பத்திகொள்தீ பத்தழகும் மைவிழிப் பெண்ணே — கண்டு
பாடிப் பணியவருள் பைங்கிளிக் கண்ணே. -18-

குறிப்புரை:-

மொய்தாதிமார் — மொய்த்துக்கூட்டமாக வரும் பணிவிடைப்பெண்கள், பத்தி-வரிசை.

76 தேவாதி தேவர்களும் சிறந்துரைக்கும் குன்றைநகர்ப்
பாவலன் கணபதிசொல் மைவிழிப் பெண்ணே — அருள்
பாலிக்கும் மாகாளிப் பைங்கிளிக் கண்ணே.

குறிப்புரை:-

முன்கும்மியைப் போலவே இதிலும் தன்பெயரைப் பாடலாசிரியர் குறிப்பிடுகிறார்.

கும்மி-111

77 ஆதி முதற்பொருளே — வீரம்மா
அண்டமெல் லாம்படைத்த
சோதியே குன்றையில்வாழ் — வீரம்மா
துர்க்கை பராபரியே. -1-

78 நீதி நிறைந்தவளே — வீரம்மா
நீல நிறக்குயிலே
தாதியர் சூழவரும் — வீரம்மா
சற்குண ஈஸ்வரியே. -2-

79 எங்கும் இருப்பவளே — வீரம்மா
ஏழைக் கிரங்கிடுவாய்
மங்கள அம்பிகையே — வீரம்மா
மாமலை பெற்ற பெண்ணே. -3-

குறிப்புரை:-

மாமலை பெற்றபெண் - மலையரசன் - பர்வதராசன், பெற்றபெண் பார்வதி - மலைமகள்.

80 கருணை பூத்தவளே — வீரம்மா
கற்பனைக்(கு) எட்டாளே
தருண மங்கலையே — வீரம்மா
சர்வ தயாபரியே.

குறிப்புரை:-

தருணம் - வீடுபேறு - மோட்சம், தயாபரி - கருணையுடைய மேலானவள்,

81 மின்னும் சடையுடையாய் — வீரம்மா
எற்றும்சூ லப்படையாய்
அன்னம் எனும்நடையாய் — வீரம்மா
ஆடகப் பூங்குடையாய். -5-

குறிப்புரை:-

எற்றும் - பகைவரைக்குத்திவீசும் ஆடகம் - பொன். பூ - அழகு

82 கன்னல் மொழியாளே — வீரம்மா
கயல்வி ழியாளே
மின்னல் ஒளியாளே — வீரம்மா
வேத வழியாளே -6-

83 மாணிக்கம் பூண்பிடியே — வீரம்மா
வைர மலர்க்கொடியே
ஆணிப்பொன் பைந்தொடியே — வீரம்மா
அண்டினேன் சேவடியே. -7-

குறிப்புரை:-

மாணிக்கம் பூண்பிடி - மாணிக்கமணி சூடிய பெண்யானை போன்றவள், ஆணிப் பொன் - சிறந்தபொன்.

84 முத்துப்பல் லக்கேறி — வீரம்மா
முன்வரும் சிங்காரி
சத்துரு சங்காரி — வீரம்மா
சர்வவி வகாரி. -8-

குறிப்புரை:-

சர்வவிவகாரி - அனைத்துச் செயல்களும் புரிகிறவள்.

85 மாலை அலங்காரி — வீரம்மா
வாவா ஓங்காரி
வாலை எனும்சூரி — வீரம்மா
வராகி ரீங்காரி. -9-

குறிப்புரை:-

சூரி - அச்சம் தரக்கூடியவள்.

86 அஞ்செழுத்(து) எட்டெழுத்தாய் — வீரம்மா
அம்பத்தோ ரட்சரமாய்
கொஞ்சிடும் ஈரெழுத்தாய் — வீரம்மா
குலவி நின்றாளே. -10-

குறிப்புரை:-

அஞ்செழுத்து - சிவயநம. எட்டெழுத்து - ஓம் ஆம் சௌம் சிவயநம. ஈரெழுத்து - சிவ.

குலவிநிற்றல் - சிவத்துடன் அத்துவிதமாய் நிற்றல். அம்பத்தோரட்சரம் வடமொழி எழுத்து ஐம்பத்தொன்று.

87 என்னுள்ளே நின்றவளே — வீரம்மா
என்னைஎ னக்கருளி
தன்னை அறிந்துகொள்ள — வீரம்மா
தந்திரம் சொன்னவளே. -11-

88 காண்பான் காட்சியும்போய் வீரம்மா
கலந்தி ருப்பதற்கு
மாண்பாய்க் காட்டிவைக்க — வீரம்மா
மலர டிசரணம்.

குறிப்புரை:-

காண்பான் காட்சியும் போய்க் கலந்திருத்தல் - தான்வேறு, காணும் பொருள் வேறாய்க் காணாமல் அதுவே தானேயான நிலை-முத்தி நிலை.

89 என்னை அறிவதற்கே - வீரம்மா
எத்தனை நாள்தவித்தேன்
உன் அரு ளாலுணர்ந்தேன் - வீரம்மா
உதவி ஒன்றறியேன். -13-

குறிப்புரை:-

உதவி-கைம்மாறு-பதிலுதவி.

90 பட்டபாடு கொஞ்சமோ - வீரம்மா
பாழுக் குழைத்தலைந்து
கெட்டகே டென்னசொல்வேன் - வீரம்மா
கேட்பதும் வெட்கமன்றோ. -14

குறிப்புரை:-

கேட்பது-நீகேட்டறிவது.

91 உன்னை மறப்பேனோ - வீரம்மா
உண்மையி லேகலந்தால்
என்னை நினைப்பேனோ - வீரம்மா
ஏகவெ ளியாச்சே -15-

குறிப்புரை:-

ஏகவெளி-ஞானாகாசம்

92 மருவி நிற்குமிடம் - வீரம்மா
வாச மகோசரமே
உருவி ருக்கினன்றோ - வீரம்மா
உன்னடி போற்றிடுவேன். -16-

குறிப்புரை:-

வாசமகோசரம்-நீ வாழும் பெருந்தனி இடம்.

93 வெட்ட வெளிதனிலே - வீரம்மா
விளைந்த பேரொளியே
இட்ட மறத்தனியே - வீரம்மா
எவ்வாறி ருப்பதுவே. -17-

94 கண்ணே மணிவிளக்கே - வீரம்மா
கற்பகம் போல்பவளே
விண்ணே நிகர்விளங்கும் - வீரம்மா
வேதாந்த மெய்க்குருவே. -18-

95 காலங் கடந்தவளே - வீரம்மா
கர்த்த வியத்தாயே
மாலை மணிக்கழுத்தி - வீரம்மா
மயில்ம லைக்காளி -19-

குறிப்புரை:-

கார்த்தவியத்தாயே-செய்யத்தக்கது அறிந் தாயே.

96 தெட்சிணா மூர்த்தியருள் - வீரம்மா
சேர்ந்த முத்துச்சாமி
நற்சேய் கணபதி சொல் - வீரம்மா
ஞானப் பதம்நமஸ்தே.

குறிப்புரை:-

தெட்சிணாமூர்த்தி-மதுரையநகில் உள்ள பனையூரில் வாழ்ந்த சுவாமிகள் இப்பாடல்களின் ஆசிரியர் மு. கணபதியா பிள்ளையின் தந்தையும் குன்றக்குடி பெஞ்ச் மாஜிஸ் டிரேட் என்று அழைக்கப்பெற்றவரும், மதுரவைத்திய பண்டிதரும் மதுரையில் நீதிபதியாய் இருந்தவருமான ஜி. முத்துச்சாமி பிள்ளைக்கு உபதேசம் செய்தவர் இத் தெட்சிணாமூர்த்தி சுவாமிகள்.

கீதங்கள்

இராகம்: தக்கேசி, தாளம்: ரூபகம்

பல்லவி

97 வீரமா காளியே மின்னும்பொன் னூபுரதாளியே (வீர)

அனுபல்லவி

தீரமயூர கிரிச் சேத்திரசர் வாதிகாரி.

சரணம்

நாரணி வராகி வில்வத் தாரணி சவுந்தரி
ஆரணி அரோகரா அரிமுகுந்தன் சோதரி
வாரணி மணித்தன மனோன்மணி மகேசுரி

வாலை எனும்நீலநிறப் பெண்ணே - திரு
வானவர்வ ணங்குமொரு விண்ணே - துய்ய
வாசமலர்த் தேசமிகும் கண்ணே - எங்கள்
வாக்கிலேநின் றாடருளாம் பண்ணே.

வாவாவா இப்போது
வருத்தங்கள் வையாது
மாதாவா என்மீது
மகிழ்ந்தொரு சொல்லோது. (வீர)

மெத்தமெத்தக் கவலையாலும் மேன்மெலிந்து வாடினேன்
இத்தரைக்குள் உனதுதொண்டரிடமும் சொல்லித் தேடினேன்
நித்தநித்தம் உன்னையே நினைந்துநொந்தும் பாடினேன்.

நீயேதிரும் பிப்பாராய் கொஞ்சம் - எந்தன்
தாயேஉனக் காகுமோ வஞ்சம் - உந்தன்
சேயேன் மிடிகொடிய பஞ்சம் - தீர
வாயே திறந்துரைஉன் தஞ்சம்.

மணமலிபூந் தோப்பே
வளரும்குன்றைக் காப்பே
கணபதிசொல் யாப்பே
கனிந்தணியும் பார்ப்பே.

குறிப்புரை:-

நூபுரதாளி - சிலம்பணிந்த திருவடியுடையவள், வில்வத்தார் - வில்வமாலை, அரிமுகுந்தன்-அரியாகிய திருமால்; குன்றைக் காப்பு-குன்றக்குடியைக் காக்கும் தெய்வமே- -1

98 இராகம்: பிலஹரி தாளம்: ஆதி

பல்லவி

அம்மா வீரமாகாளித்தாயே உன்னை
வேண்டினேன் அருள்வாயே (அம்மாவீர)

அனுபல்லவி

திரு—மிகுந்தகுன்றையில் மகிழ்ந்திருந்திடு
சுகந்தசந்தன கதம்பசுந்தரி (அம்மா வீர...)

தொகையறா

1 மேலான தெய்வமே மெய்ஞ்ஞான வாலையே
விகசிதோங் கார ரூபி
சூலான துங்கொண்டு ஈரேழு லோகமும்
சுற்றிமகு டனைவெல் கோபி
தொண்டருக் கெளியாளே பர
சுகம்கொடுப்ப தெந்நாளே (அம்மா வீர...)

2 சிங்கப் பிடாரியே சிந்தூர மாரியே
சிறுபிராய ரீங்காரியே
சங்கரி வகாரி பொங்கிடு முகாரியே
சட்சமய சமவிரியே
தமியனாம் கணபதியே தொழும்
சரண கருணா நிதியே. (அம்மா வீர...)

குறிப்புரை:-

விகசித ஓங்காரம்-மலர்ந்தஓங்காரம்; வகாரி - திருவைத்தெழுத்தாம்''சிவயநம'' வில் வகரமாய் விளங்குகின்றவள். (வகரம் - பராசத்தி); முகாரி - முதன்மையானவள், சட்சமயம் - அகச் சமயங்கள் ஆறும்;அவை;சைவம்,பாசுபதம், மாவிரதம், காளாமுகம், வாமம்,வைரவம் என்பன.

-2-

99 இராகம் : தோடி தாளம் : ரூபகம்

பல்லவி

வீரமா காளித்தாயே விரைவில் வந்தருள்வாய் (வீர)

அனுபல்லவி

1 வாரார் மயூரகிரி வடக்குவாழ் கிருபாகரி
மருகு மந்தாரை செவ்வந்தி செண்பகம்
அறுகு அணிந்தாடும் செவ்வந்தி வண்ணனும்.
மகிழும் சுந்தரத் தாளே அருள்
புகழ்பொன் னூபுரத்தாளே. (வீர)

2 மாய்கைப் பசாசினாலே வாடிமெலிந்தேன் என்மேலே
வரம்தந்தும் தமிழ் தெரிந்தும் தன்கவி
வரைந்திங்குந் தவம் புரிந்தும் சிந்தைசெய்
மனமெனக் கினித் தாராய் உந்தன்
தனயனெனைக் கண் பாராய். (வீர)

3 பூமியிலே பிறந்துசும்மா பூண்டதுயர்போதுமம்மா.
பொறுமை அன்பருள் பெருமை அன்பரின்
அருமை நன்பல தரும சிந்தையும்
புகலும் பூரண ஞானம் தந்தால்
அகலும் எந்தன் அஞ் ஞானம். (வீர)

4 ஒருசாண் வயிற்றையிட்டு ஓடியோடிப் பாடுபட்டு
உண்டுண் டுறங்கியும் கண்டொண்டு பெண்டுகள்
கண்டண்டி மங்கியும் சண்டன் தண்டிட்டடித்
துதைக்கப் பாடையில் தூக்கி மண்ணில்
புதைக்கும் வாழ்க்கையை நீக்கி (வீர)

5 சேயேன் கணபதியே செபிக்கும் குணாநிதியே
சித்ர நடனப்ர மத்வைத நித்திய
சத்ய சமஸ்த்த சகஸ்த்ரய முத்தியைத்
தரும்பெரும் தயாநிதியே உன்னை
விரும்பி நின்றேன் இத்திதியே. (வீர)

குறிப்புரை:-

வார்-மேகம், ஆர்-தங்கும், கிருபாகரி-அருளை ஆள்கின்றவள், தனயன்-மகன் கண்டு ஒண்டு பெண்டுகள் கண்டு அண்டி மங்கியும்; மங்கி-புகழ்மங்கி சண்டன் தண்டு இட்டு அடித்து உதைக்க,

சண்டன்-எமன்; தண்டு-அடிக்க உதவும்தடி.

சித்ரநடனப்பிரமத்வைத-அழகியநடனம் புரியும் பரம்பொருளுடன் இரண்டல்லாததாக (அத்வைதமாக) விளங்கும்; நித்திய-அழிவற்றவளாக, சத்ய-துக்க நிவாரணியாக, சமஸ்த-ஆதாரமானவளாக, சகஸ்த்ரய முத்தி-மூவகை முத்திப்பெறு (சாலோக, சாமீப சாரூபம் என்கிற அபரமுத்திகள்) இத்திதியே-இச் சமயத்தில்-இத்தருணத்தில். -3-

வருகைப் பஞ்சகம்

100 பொன்னே வருக மலையளித்த
பூவாய் வருக புவிபுரக்கும்
மன்னே வருக அமரருயாத்(து)
அரசி வருக வான்சடைதோய்
மின்னே வருக வியன்மயின்மா
மெச்லி வருக விரைந்துவராய்

என்னே வீர மாகாளி
    எழுந்து வருக வருகவே.

குறிப்புரை

மலையளித்த பூவாய்-மலையரசன் மகளான குயிலே, மன்னே-பெருமையுடையவளே வான்சடை-மேலான பிரஉப, மின்-மின்னல், ஒளி, வியன் மயின்மா மெல்லி-பெருமைபொருந்திய மயில் போன்ற மெல்லியளே, விரைந்து வராய்-விரைந்து வருக, எழுந்து-கண்ணுக்குப் புலனாகும் வகையில் தோன்றி, வராய். குறுக்கல் விகாரம். -1-

101 கரும்பே வருக கருணை உருக்
    கவுரி வருக கற்பகப்பொற்
பறம்பே வருக பார்ப்பாரப்
    பாவாய் வருக பனிமதிமேய்
சுரும்பே வருக தென்னவன்ஈ
    சுதையே வருக தூயமுத்தி
தரும்பே ரமுதே மாகாளித்
    தலைவி வருக வருகவே.

குறிப்புரை:-

பறம்பு-திருமார்பு. பனிமதிமேய் சுரும்பு-குளிர்ந்த அறிவைத் துய்க்கும் தேனீ சுதை-பெற்ற மகள், அங்கயற்கண்ணி. -2

102 உமையே வருக உயிர்ஓம்பும்
    ஒருத்தி வருக உயிர்யாவும்
தமையே நோக்கத் தனித்திருக்கும்
    தாயே வருக சந்திரநீர்ச்
சுமைஏ (று) அரும் சுகிமயின்மாத்
    துரைச்சி வருக மாகாளி
எமையாள் சின்னஞ் சிறுகுழந்தாய்
    எழுந்து வருக வருகவே.

குறிப்புரை

உயிர்யாவும் தமையே நோக்கத் தனித்திருக்கும்-உயிர்கள் எல்லாம் சத்தியாகிய தன்னையே எண்ணுமாறு ஒப்பற்று விளங்கும். சந்திரன் நீர்ச்சுமை ஏறு அரும் சுகி-பிறையும், கங்கையுமாகிய சுமைகளைத் தாங்கிய ஒப்பற்றவராகிய சிவன் இன்புறும் -3-

103 நன்றே வருக எம(து)உதவி
    நங்காய் வருக நடந்(து;உவக்கும்
ஒன்றே வருக ஓவியமாய்
    உறைந்தாய் வருக உமைவருக

இன்றே வருக இவண்வருக
இனிது வருக இனிவருக
மன்றே வருக மயின்மாமா
காளி வருக வருகவே.

குறிப்புரை:-

நடந்து உவக்கும்-எண்ணம் நடைபெற-நிறைவேற்ற-மகிழும்; மன்றே-அனைவர்க்கும் பொதுவானவளே. -4-

104 ஆற்றேன் ஆற்றேன் அலக்கண்எலாம்
அறிந்தா யிலையோ அம்மம்மா
கூற்றே அனைய கொடுநோயும்
குலைக்கும் குவட்டின் கொடிக்கொழுந்தே
நீற்றே ரமைவாய் நிலாவூறும்
நெடுங்கா(டு) அடவி நிரைமயின்மாப்
போற்றேர் அதும்ஊர் மாகாளி
புகழ்ந்து வருக வருகவே.

கூட்டுமுறை:-

நிரைமயில்மா புகழ்ந்து போற்று ஏர் அதும்ஊர்மாகாளி வருகவே என்று கூட்டுக

குறிப்புரை:-

அலக்கண் - துன்பம், குலைக்கும் - அழிக்கும்; குவடு - பாறைஉச்சி;ஏர்-பேரழகு அதும் ஊர் - அதுவும் பெற்ற.

பொழிப்புரை:-

நான்படும் துன்பங்களை எல்லாம் நீ அறியவில்லையா? அம்மம்மா! என்னால் இனியும் பொறுக்கமுடியாது. எமனைப்போன்ற கொடிய நோயையும் தீர்க்கின்றவளே; பாறை உச்சியில் எழுந்தருளி அருள் வழங்கும் கொடிக்கொழுந்தே; திருநீற்றின் அழகு அமைந்ததுபோல வெண்மையான நிலாஒளி ஊறும் உயர்ந்த சோலையிலும் காட்டிலும் உள்ள கூட்டமான மயில்கள் புகழ்ந்து போற்றும் அழகினையும் உடையவளே! வீரமாகாளித்தாயே! அருள்புரிய எழுந்தருள்க.

சத்தப்பிரபந்தம்

குன்றக்குடி வைத்தியம் வரகவி

மு. கணபதியாபிள்ளை

---

105 அம்மா வருக அருள்கனிந்த
ஆற்றல் வருக சிவம் தழுவு
கொம்பே வருக இமவானின்
கொடியே வருக உனைஎன்றும்

நம்பும் அடியார் அகத்தூறும்
நலமே வருக நாளும்யாம்
வெம்பா காக்கும் வீரமா
காளி வருக வருவே.

குறிப்புரை:-

வெம்பா - கலங்காமல்' 1

106 அடியார் உள்ளத்(து) அமுதூறும்
அழகே வருக ஆதிமுதல்
கொடிதாய் மூள்எம் மலமழிக்கும்
கொடியே வருக எமைச்சார்ந்த
மிடிகள் பொடியாய் ஆக்கிட நீ
விரைந்தே வருக பெருமான்உள்
நடிக்கும் வீர மாகாளி
நயந்தே வருக வருகவே.

குறிப்புரை:-

மிடிகள் - வறுமை (மனம், மொழி, மெய், செயல், செல்வம், முதலியவறுமைகள்) 2
நடிக்கும் - தோன்றும்.

107 மலையத் துவசன் பெற்றெடுத்த
மகளே வருக திருமாலாம்
அலையிற் கிடந்தான் அகம்மகிழும்
தங்கையாய் வருக மன்றத்தே
நிலையாய் நடிக்கும் எண்தோளன்
மனைவீ வருக நுதல்கண்தீ
விளைநன் மணியின் தாய்வருக
விளங்கும் எம்தாய் வருகவே.

குறிப்புரை:-

நடிக்கும் - கூத்தாடும். நுதல்கண்தீ விளைநன்மணி - சிவபெருமானது நெற்றிக்கண் தீயில் பிறந்த நன்மணியாம் அருள்தரு சண்முகநாதப் பெருமான் 3

108 எண்ணத் தொலையாப் பிறப்பெடுத்தேன்
ஏதும் அறியேன் உழல்கின்றேன்
நண்ணும் நின்திரு வடியிணையாம்
நளினக் கரையில் சேர்தற்குத்
திண்ணம் இன்றே உளங்கொண்டேன்
திருவே வீர மாகாளிக்
கண்ணுள் தாயே எமைக்கரையிற்
சேர்க்க வருக வருகவே

குறிப்புரை:-

நளினம் - தாமரை, கண்ணுள் - கண் - உள் - கண்ணிலும் உள்ளத்திலும் நிறைந்த; கண்ணுள் நிறைந்த எனினும் அமையும் 4

109 அருளே சொரியும் கடைக்கண்ணால்
அடியோம் வினைகள் பரிந்திடவும்
தெருளே காக்கும் திருவாயால்
தெளிவை நல்கி வாழ்த்திடவும்
பொருள்சேர் அபயக் கரத்தாலே
பொலியும் நலங்கள் புரிந்திடவும்
திருவார் கமலச் சேவடியால்
திருவே சேர்க்க வருகவே.

குறிப்புரை:-

பரிந்திட — சிதைந்தழிய, ஒட்; தெருள்-விளக்கம், திரு—பொலிவு; வீடுபேறு. 5

110 அடியார் உள்ளத்(து) ஒளி விளக்கே
அழகே பெருகும் கற்பகமே
நடிக்கும் பெருமான் பெருவாழ்வே
நாடும் ஞானந் திரள்உருவே
வடித்த சூலப் படைத்தேவே
வண்மை உளத்து ஞானியர்கள்
பிடித்த வீர மாகாளிப்
பேறே வருக வருகவே.

குறிப்புரை:-

வடித்த — கூர்மையான, வண்மை உளத்து — வளமார்ந்த உள்ளமுடைய. 6

111 தாளும் பொலிவார் திருவுருவு
தாங்கும் நெஞ்சம் தரவருக
நாளும் நலமே சேர்த்(து) உயர்த்தும்
நலஞ்சேர் நினைவே தரவருக
கோளும் குறும்பும் குலைத்(து) அருளே
கொழிக்கும் சொல்லே தரவருக
நீளும் நன்மைச் செயல்தரவே
நீலக் குயிலே வருகவே.

குறிப்புரை:-

கோள் - கோள்கூறுதல், குறும்பு - குறும்புப்பேச்சு, நின்தாளும் என்று வருவித்து எடுக்க. 7

112 செந்தீ வடிவன் இடந்தழுவிச்
சேர்ந்தும் வாடா மென்மலரே
அந்தீ வண்ணன் அகத்(து)இருந்தும்
அருளே சுரக்கும் புத்தமுதே
செந்தீ யாக நிமிர்சிவனைச்
செம்மை உளங்கொள் சுடர்விளக்கே.
எந்தீ மையெலாம் அறுத்தெறிய
அம்மா வருக வருகவே.

குறிப்புரை:-

தீயைத் தழுவியும் வாடாமென்மலர். தீக்தள் இருந்தும் அருள் சுரக்கும் அமுது. பெருந்தீயைத் தன்றுள் அடக்கிய சுடர் விளக்கு நீ எனவே அற்பமான என்தீமையெலாம் அறுத்தெறிய முடியும் உன்னால் என்பது குறிப்பு.

113 தாயே கருணைத் தடங்கடலே
தாங்கும் தவத்தின் சுடர்க்கொழுந்தே
பேயே ஒத்தார் மனம்மாற்றிப்
பெட்பாய் ஆக்க வல்லவளே
சேயேம் உளத்திற் புதராகச்
செழிதீ வினைதீர்த்(து) எமையாள
நீயே வருவாய் மாகாளி
நிமலாய் வருக வருகவே.

குறிப்புரை:-

பெட்பாய் - விரும்பத்தக்கவளாய்.

114 கருணைத் தேவீ வேண்டுகிறோம்
காப்பாய் தருவாய் செம்மையுளம்
உருக்கின் உழைப்போ(டு) உடல்நலமும்
உறவார் உள்ளப் பெருவாழ்வும்
திருவும் நல்லோர் கூட்டுறவும்
திகழும் ஞானம் எம்மிடையே
கருத்தாய் வளர்க்க வீரமா
காளீ வருக வருகவே.


குறிப்புரை:-

கருணைத்தேவீ வேண்டுகிறோம்; செம்மையுளம்.......... எம்மிடையே தருவாய் காப்பாய் கருத்தாய் வளர்க்க வீரமாகாளி வருக வருக என்று கூட்டுக.

குன்றக்குடிஆதீனப்புலவர்
வித்வான் க. கதிரேசன் எம்.ஏ;பி.எட்
குன்றக்குடி

திருச்சிற்றம்பலம்

பாட்டு முதற்குறிப்பு



பெருந்தேன் இறைக்கும் நறைக்கூந்தல்
பிடியே வருக முழுஞானப்
பெருக்கே வருக பிறைமௌலிப்
பெம்மான் முக்கண் சுடர்க்கிடுநல்

விருந்தே வருக மும்முதற்கும்
வித்தே வருக வித்தின்றி
விளைந்த பரமா னந்தத்தின்
விளைவே வருக பழமறையின்

குருந்தே வருக அருள்பழுத்த
கொம்பே வருக திருக்கடைக்கண்
கொழித்த கருணைப் பெருவெள்ளம்
குடைவார் பிறவிப் பெரும்பிணிக்கோர்

மருந்தே வருக பசுங்குதலை
மழலைக் கிளியே வருகவே
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே

— குமரகுருபர அடிகள்

★ மலர் அச்சகம், குன்றக்குடி.